Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 06 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY • மக்கள் தினசரி •

## பிரான்சிற்குச் சென்ற 18 பேரை ஒரிஸாமுகாமிற்கு அனுப்பமுயற்சி

(கல்கத்தா)

கடந்த மாதம் 31 ஆம் திகதி பிரான்சிற்குச் சென்ற இலங்கைத் தமிழ் அகதிகள் அங்கிருந்து திருப்பி அனுப்பப்பட்டு கல்கத்தா விமான நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த அகதிகள் பதினெட்டுப் பேரும் எயரோ புளொட் விமானத்தில் பிரான்சில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டனர்.

கல்கத்தா விமான நிலையத்தில் தங்கியிருக்கும் இவர்கள் தம்மை தமிழ் நாட்டுக்கு இலவசமாக அனுப்பிவைக்குமாறு விடுத்த கோரிக்கை மறுக்கப்பட்டுள்ளது. (6 ஆம் பக்கம் பார்க்க)

நாதம் 01 பிரமோதூத ளுல வைகாசி மீ 22 ஆம் உ செவ்வாய்க்கிழமை (05 - 06 - 1990) ஹிஜ்ரி 1410 ஜுல்ஹஜ் 11 ஓசை 107

# அநுரா வருகிறார் புலிகளைசந்திக்க!

## ஆறாவது திருத்த நீக்கம் பற்றி ஆராய்வார்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உப-தலைவரும் எதிர்க்கட்சி பதில் தலைவருமான திரு. அநுரா பண்டாரநாயக்கா அடுத்தவாரம் யாழ்ப்பாணம் வருகிறார். அவருடன் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிலரும் வர விருப்பதாகத் தெரிகிறது. யாழ்ப்பாணத்தில் விடுதலைப்புலிகளைச் சந்தித்து ஆறாவது சட்டத் திருத்தம் சம்பந்தமாக புலிகள் இயக்கத்தின் நிலைப்பாட்டை அறிந்து செல்வதற்காகவே அநுரா யாழ்ப்பாணம் விஜயம் செய்யவிருப்பதாக நம்பகமான வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆறாவது சட்டத் திருத்தத்தை நீக்கும் மசோதா ஒன்றை அரசாங்கம் விரைவில் பாராளுமன்றம் சமர்ப்பிக்கவிருப்பதால் இந்த மசோதாவை ஆதரிப்பதா அல்லது எதிர்ப்பதா என்ற முடிவை ஸ்ரீ. ல. சு. க. எடுக்க வேண்டும். இந்த மசோதா தோற்கடிக்கப்பட்டால் அது தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் பெரும் அநீதியாகக் கருதப்படும், அதோடு விடுதலைப் புலிகளை தேசிய அரசியல் நீரோட்டத்திலிருந்து அந்நியப்படுத்தி, பெரும் அரசியல் நெருக்கடியை உருவாக்குவதாக அமையும். இந்த வரலாற்றுப் பழி சுதந்திரக் கட்சி மீது விழும். ஆகவே, ஆறாவது சட்ட திருத்தம் சம்பந்தமாக சுதந்திரக்கட்சித் தலைமைப்பீடம் தனது நிலைப்பாட்டை மறுபரி

(6ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவுடன் பொருளாதார உறவுகளைப் புதுப்பிக்க முயற்சி

(கொழும்பு)

இந்தியாவுக்கும் இலங்கைக்கும இடையிலான வர்த்தக பொருளாதார உறவுகளை மீண்டும் ஏற்படுத்த வர்த்தக வியாபார அமைச்சர் ஏ. ஆர். எம். மன்சூர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதனையடுத்து எதிர்வரும் ... அதிகாரிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தையடுத்துஜே.வி.பியினர் இந்தியப் பொருட்களை பகிஷ்கரிக்கவேண்டும் என விடுத்த எச்சரிக்கையினால் இந்திய பொருட்கள் இங்கு வருவது

## சிலை திறப்பு

(யாழ்ப்பாணம்)

தியாகி சிவகுமாரின் சிலை திறப்பு இன்று மாலை உரும்பிராய்ச் சந்தியில் இடம் பெறும். இதில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் கோ. மகேந்திரராசாவும்வேறும்பலவிடுதலைப் புலிகள் பிரமுகர்களும் கலந்து கொள்வார்கள்.

## கையினால் சுற்றி நீர் இறைக்கும் இயந்திரம்

கையினால் சுற்றி இயங்கச் செய்யும் நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றை அரச உலோகக் கூட்டுத் தாபனம் கண்டு பிடித்துள்ளது.

நிமிடமொன்றிற்கு 5 கலன் நீரை இறைக்கக்கூடிய இந்த இயந்திரத்தின் விலை 1500 ரூபாவுக்கும் குறைவாகும்.

இந்த இயந்திரம் கூடிய விரைவில் சந்தைப் படுத்தப்படும். இவ்வாறு ஒரு இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்ட தகவலை கூட்டுத்தாபனத் தலைவர் நிமால் பிரேமரட்ணா வெளியிட்டார்.

## மனைவி மீது சந்தேகம்; பொலிஸ்காரரின் முடிவு!

(இரத்தினபுரி)

ககாவத்தை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இளம்பெண் ஒருவர் பணியாற்றி வருகிறார். இவர் மணமானவர். இவரது கணவர் ஒரு பொலிஸ்காரரர்.

இந்தப் பெண்ணுக்கும், உதவி அரசாங்க அதிபருக்கும் தொடர்பு மிக நெருக்கமாகி வளர்ந்துவிட்டதாகப் பொலிஸ்காரரான கணவருக்குச் சந்தேகம் வளர்ந்தது. மனைவியை வேலைக்குச் செல்ல வேண்டாமென்றும், இடமாற்றம் பெற்றுச்செல்லுமாறும் கேட்டாராம். இதற்குப் பயன் கிடைக்காமல் போகவே. உதவி அரசாங்க அதிபரின் அலுவலகத்துக்குச் சென்ற பொலிஸ்காரர் அங்கிருந்த ஜீப் வண்டிக்குத் தீ வைத்துக் கொளுத்தினார் அலுவலகக் கட்டிடம மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தார். பின்னர் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

[] வடக்கு - கிழக்கு மாகாணசபை

# 3 மாதத்தில் புதிய தேர்தல் - பிரேமா அறிவிப்பு

## புலிகளுடன் மோதல் என்ற பேச்சுக்கே இடமில்லையாம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணசபையைக் கலைக்கும் மசோதா அடுத்த வாரம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு அடுத்த மூன்று மாதங்களில் மாகாண சபைக்கான புதிய தேர்தல் நடத்தப்படுமென்று ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர்களுக்கு உறுதியளித்திருக்கிறார்.

ஆறாவது திருத்தத்தை நீக்கினால் மட்டுமே தேர்தலில் விடுதலைப் புலிகள் போட்டியிட்டு ஜனநாயக நீரோட்டத்தில் கலந்துகொள்ள முடியுமென்று விடுதலைப் புலிகள் ஜனாதிபதி பிரேமதாசாவிடம் தெளிவாகத் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர்களுக்கும் ஜனாதிபதி பிரேமதாசாவுக்குமிடையில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த சந்திப்புபற்றி விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் பத்திரிகை நிரு

(6ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் புலிகள் ஹமீத், தளபதிகள் சந்திப்பு

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகளுக்கும், அரசு பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று மட்டக்களப்பில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. காலை பத்து ... உபவேந்தரின் இல்லத்தில் நடைபெற்றன.

இதில் விடுதலைப்புலிகளின் சார்பில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், செயலாளர் யோகரட்னம் யோகி, ... நியூட்டன், மகான் ஆகியோர் விடுதலைப் புலிகள் தரப்பில் இதில் கலந்து கொண்டனர்,

அரசு தரப்பில் வடக்கு, கிழக்கு மாகாண சமாதானக் குழுத் தலைவரும், நீதி

மசோதாவை ஆதரிப்பதா அல்லது எதிர்ப்பதா என்ற முடிவை ஸ்ரீ. ல. சு. க. எடுக்க வேண்டும். இந்த மசோதா தோற்கடிக்கப்பட்டால் அது அந்நியப்படுத்தி, பெரும் அரசியல் நெருக்கடியை உருவாக்குவதாக அமையும். இந்த வரலாற்றுப் பழி சுதந்திரக் கட்சி மீது விழும். ஆகவே,

## இந்தியாவுடன் பொருளாதார உறவுகளைப் புதுப்பிக்க முயற்சி

(கொழும்பு)

இந்தியாவுக்கும் இலங்கைக்கும இடையிலான வர்த்தக பொருளாதார உறவுகளை மீண்டும் ஏற்படுத்த வர்த்தக வியாபார அமைச்சர் ஏ. ஆர். எம். மன்சூர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதனையடுத்து எதிர்வரும் 14ஆம் திகதியும், 15ஆம் திகதியும் கொழும்பில் இருநாட்டு அதிகாரிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது.

இந்திய இலங்கை ஒப்பந்தத்தையடுத்துஜே.வி. பியினர் இந்தியப் பொருட்களை பகிஷ்கரிக்கவேண்டும் என விடுத்த எச்சரிக்கையினால் இந்திய பொருட்கள் இங்கு வருவது தடைப்பட்டது.

(6ஆம் பக்கம் பார்க்க)

### கிழக்கிலங்கை பல்கலைக்கழகத்திற்கு

## மாணவர்குறைப்பு,நிதிவெட்டால் எதிர்காலம் பாதிப்படையும்

(மட்டக்களப்பு)

கிழக்கு பல்கலைக்கழகத்தில் அனுமதிபெறும் மாணவர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு வருகின்றது. இந்நிலை தொடருமானால் பல்கலைக்கழகத்தின் எதிர்கால நிலை மிக மோசமாகிவிடும்.

மேற்கண்டவாறு கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கல்வியணிசாரா ஊழியர்கள் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டத்திற்கு தலைமை வகித்து பேசிய சங்க தலைவர் திரு. எம். வர்ணகுலசிங்கம் கூறினார்.

பல்கலைக்கழக மண்டபத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில் சிறப்பு அதிதியாக உபவேந்தர் பேராசிரியர் எஸ். சந்தானம் கலந்து கொண்டார்.

அவர் மேலும் பேசுகையில்,

(6ஆம் பக்கம் பார்க்க)

## கஷ்டப் பிரதேச ஆசிரியர்களுக்கு மேலதிக சம்பள, விசேடவசதிகள்

(கொழும்பு)

கஷ்டப் பிரதேசங்களில் பணி புரியும் ஆசிரியர்களுக்கு அவர்களை ஊக்குவிக்க மேலதிக சம்பளம், மற்றும் விசேட வசதிகள், கொடுப்பனவு என்பவற்றை வழங்க கல்வி அமைச்சர் லலித் அத்துலத்முதலி நடவடிக்கை எடுத்துள்ளார்.

கஷ்டப் பிரதேசங்களுக்கு சில ஆசிரியர்கள் செல்ல மறுப்பதாலும், உண்மையாக அவர்கள் அங்கே கஷ்ரப்படுவதையும் அவதானித்தே அமைச்சர் இந்த நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

இதனால் இனி கஷ்டப்பிரதேசங்களுக்கு ஆசிரியர்கள் விரும்பிச் செல்வார்கள் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

சில மாவட்டங்களிலும் சில பாடசாலைகளிலும் மேலதிகமாக ஆசிரியர்கள் இருப்பதை கல்வி அமைச்சு கண்டுபிடித்துள்ளது என்றும் அவர் சொன்னார்.

## மாணவர் மதிய உணவுமுத்திரை வெட்டி ஒப்படைத்தலுக்கு தடை

(மட்டக்களப்பு)

பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவு முத்திரை தனியாக அல்லது குழுவாக வெட்டி ஒப்படைத்தல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரேதடவையில் கூட்டுறவு கடைகளில் ஒப்படைத்து உணவுப்பொருட்களை பெற்றுக்கொள்ளலாம்.

இத்தகவலை மட்டக்களப்பு மாவட்ட சமூக சேவைகள் உதவிப் பணிப்பாளர் திரு. இரா. தியாகராசா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்;

இம் முத்திரைகள் ஒப்படைத்து கூட்டுறவு கடைகளில் பணம்பெற முடியாது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 99,765 மாணவர்கள்

(6ஆம் பக்கம் பார்க்க)

## மனைவி மீது சந்தேகம்; பொலிஸ்காரரின் முடிவு!

(இரத்தினபுரி)

ககாவத்தை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இளம்பெண் ஒருவர் பணியாற்றி வருகிறார். இவர் மணமானவர். இவரது கணவர் ஒரு பொலிஸ்காரர்.

இந்தப் பெண்ணுக்கும், உதவி அரசாங்க அதிபருக்கும் தொடர்பு மிக நெருக்கமாகி வளர்ந்துவிட்டதாகப் பொலிஸ்காரரான கணவருக்குச் சந்தேகம் வளர்ந்தது. மனைவியை வேலைக்குச் செல்ல வேண்டாமென்றும், இடமாற்றம் பெற்றுச்செல்லுமாறும் கேட்டாராம். இதற்குப் பயன் கிடைக்காமல் போகவே. உதவி அரசாங்க அதிபரின் அலுவலகத்துக்குச் சென்ற பொலிஸ்காரர் அங்கிருந்த ஜீப் வண்டிக்குத் தீ வைத்துக் கொளுத்தினார் அலுவலகக் கட்டிடம மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தார். பின்னர் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

## தட்டுப்பாட்டை நீக்க பருப்பு வெங்காயம் இறக்குமதி

(கொழும்பு)

கடந்த சில மாதங்களாக நிலவி வந்த பருப்பு, வெங்காயம் தட்டுப்பாட்டினை நீக்கும் பொருட்டு இலங்கைக் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் பருப்பு, வெங்காய இறக்குமதியைச் செய்துள்ளது.

துருக்கியில் இருந்து வருவிக்கப்பட்ட 4300 மெற்றிக் தொன் பருப்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

இந்தப் பருப்புத் தொகுதியைக் கப்பலில் இருந்து இறக்கி விநியோகிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாகக் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தின் தலைவர் ஆரிய சமரவீர கூறியுள்ளார்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## பரந்தன் தொழிற்சாலை மீண்டும் இயங்கும்

(கொழும்பு)

பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை இன்னும் சிலதினங்களில் மீண்டும் ஆரம்பிக்கப்படவிருப்பதாக கூட்டுத்தாபனத் தலைவர் திரு. உபாலி சில்வா தெரிவித்தார்.

கடந்த 6 வருடங்களாக மூடப்பட்டிருந்த பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையின் உற்பத்தி வேலைகள் இன்னும் சில தினங்களில் மீண்டும் ஆரம்பமாகவுள்ளன தொழிற்சாலையிலுள்ள இயந்திர உபகரணங்கள் தற்பொழுது சீரமைக்கப்பட்டு வருகின்றன.

இந்தத் தொழிற்சாலை மீண்டும் திறக்கப்படவேண்டும் என்ற யோசனையை ஜனாதிபதி ஆர். பிரேமதாசா ஏப்ரல்

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஏமாற்றப்பட்டவர் முகவரின் குழந்தையைக் கடத்தினார்

(கொழும்பு)

வெளிநாட்டு வேலைவாய்ப்புத் தேடிக்கொடுக்கும் முகவர் ஒருவர் பணத்தைப் பெற்றுக்கொண்டு சில வருடங்களாக டிமிக்கி கொடுத்துவந்தாராம். வேலைதேடிக் கொடுத்து வெளிநாட்டுக்கு அனுப்பாவிட்டாலும் பரவாயில்லை கொடுத்த பணத்தை யாவது திருப்பித்தரும்படி ஆயிரம் தடவைக்குமேல் பணம் கொடுத்தவர் முகவரிடம் அலைந்து திரிந்தாராம். வெளிநாட்டுக்கும் அனுப்பவில்லை, வேலையும் தேடித்தரவில்லை, இவைதான் கிடைக்கவில்லையானாலும் கொடுத்த பணத்தைக் கூடத் திருப்பிக்கொடுக்க முகவர் முன்வரவில்லை. பணம் கொடுத்தவர் பொறுமை இழந்தார். கொள்ளுப்பிட்டியிலுள்ள முகவரின் இல்லத்திற்குச் சென்றபோது முகவர் இல்லையென்றும் அவர் வெளிநாடு சென்றுவிட்டதாகவும் கூறப்பட்டது. ஆத்திரமடைந்த அவர் அங்கு நின்ற குழந்தையைக் கடத்திச்சென்றுவிட்டார். "இரண்டுலடசம் ரூபாய் தந்துவிட்டுக் குழந்தையைக் கொண்டு செல்லலாம்" என்று பளையிலிருந்து பணம் கொடுத்தவர் முகவர் வீட்டுக்குக் கடிதம் அனுப்பினார். பளைக்குச்சென்று பணத்தைச் செலுத்தி குழந்தையையும் மீட்டுச் சென்றார்களாம் முகவரின் குடும்பத்தினர்.

ஆறாவது திருத்தத்தை நீக்கினால் மட்டுமே தேர்தலில் விடுதலைப் புலிகள் போட்டியிட்டு ஜனநாயக நீரோட்டத்தில் கலந்துகொள்ள முடியுமென்று விடுதலைப் புலிகள் ஜனாதிபதி பிரேமதாசாவிடம் தெளிவாகத் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர்களுக்கும் ஜனாதிபதி பிரேமதாசாவுக்குமிடையில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த சந்திப்புபற்றி விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் பத்திரிகை நிரு

(6ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் புலிகள் ஹமீத், தளபதிகள் சந்திப்பு

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகளுக்கும், அரசு பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று மட்டக்களப்பில் பேச்சுவார்த்தை நடைபெற்றது. காலை பத்து மணி முதல் பகல் இரண்டு மணி வரை இப்பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

இப்பேச்சுவார்த்தை மட்டக்களப்பு பல்கலைக்கழக உபவேந்தரின் இல்லத்தில் நடைபெற்றன.

இதில் விடுதலைப்புலிகளின் சார்பில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், செயலாளர் யோகரட்னம் யோகி, அம்பாறை - மட்டக்களப்புப் பிராந்தியத் தளபதி கருணா, புலிகள் மக்கள் முன்னணி பிரதித் தலைவர் கரிகாலன், மாவட்ட அமைப்பாளர் விசு, நியூட்டன், மகான் ஆகியோர் விடுதலைப் புலிகள் தரப்பில் இதில் கலந்து கொண்டனர்,

அரசு தரப்பில் வடக்கு, கிழக்கு மாகாண சமாதானக் குழுத் தலைவரும், நீதி அமைச்சருமான ஏ. ஸி. எஸ். ஹமீத்தும், வடக்கு-கிழக்குப் பிராந்திய இராணுவத்தளபதி ஜெனரல் ஸ்ரான்லி சில்வா,

(6ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் தீர்வுக்கு ஸ்ரீ. ல. சு. கட்சி, ஸ்ரீ.ல.மு.கா. தடையாக உள்ளன

\- யோகி

(லண்டன்)

இலங்கை அரசாங்கம் தற்பொழுது உள்ளும்புறமும் பல நெருக்கடிகளை எதிர்நோக்கி இருப்பதாகும், இலங்கை அரசாங்கம் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் முட்டுக்கட்டையாக உள்ளதாகவும் நேற்று முன்தினம் பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் யோகரெட்ணம் யோகி தெரிவித்தார்.

மேலும் ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கையில் சர்வதேச மன்னிப்புச்சபை விடுதலைப் புலிகள் மீது அபாண்டமான பழியைச் சுமத்துவதாகவும், தற்பொழுது சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் வடக்குக் கிழக்கில் இயங்குவதாகவும், சர்வதேச மன்னிப்பும் பொறுப்பற்ற முறையில்

(6ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கக் காணிகள் பகிர்ந்தளிப்பு யாழ்.அரச அதிபர் துரித நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகள் அவ்வப்பகுதி மக்களுக்குப் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளை யாழ். அரச அதிபர் துரிதப்படுத்தியுள்ளார். இவ்வாறு காணி வழங்கும்போது காணியில்லாதோருக்கும், விவசாய, கைத்தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள விரும்புவோருக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

இதற்கான முதற் திட்டமாக சகல உதவி அரச அதிபர் பிரிவுகளிலுமுள்ள அரச காணிகள் பற்றிய விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன. மருதங்கேணி, சாவகச்சேரி, வடமராட்சி கிழக்கு, வேலணை போன்ற பிரிவுகளிலேயே அரச காணிகள் அதிகமாக இருக்கின்றன. மருதங்கேணியில் 700 ஏக்கரும், சாவகச்சேரியில் 150 ஏக்கரும் இருப்பதாகத் தெரியவருகிறது.

காணிகள் பகிர்ந்தளிக்கும் போது, காணிகள் பாவனைக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ப.நோ.கூ. சங்க தராசுகளுக்கு முத்திரை இடப்பட்டுள்ளது

\- பொது முகாமையாளர்

எமது களஞ்சியங்களில் 9 தராசுகள் உண்டு. அவைகள் யாவும் முத்திரையிடப்பட்டுள்ளன. ஆதாரமாக நிறையளவை, முகத்தலளவை. சட்டப் பரிசோதகர் மூலம் வழங்கப்பட்ட ரசீது இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தராசுகள் முத்திரையிடப்படவில்லை

(6 ஆம் பக்கம் பார்க்க)

வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

திருநெல்வேலி கிழக்கு சேச் லேனில் நல்ல சுற்றாடலில் லுள்ள காணியும் நல்லூர் ராணி வீதியிலுள்ள காணியும் மன்னார் இலுப்பைக் கடவையிலுள்ள வயல் காணிகளும் விற்பனைக்குண்டு.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி நா. வ. கந்தையா அன் சன்ஸ், பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு சந்தை, நல்லூர். (R. 828)


## விளையாட்டுப்போட்டி

(தம்பிலுவில்)

தம்பிலுவில் கொத்தணி விளையாட்டுப் போட்டி கொத்தணி அதிபர் திரு. வி. ஜே. ஜெயராஜசிங்கம் தலைமையில் தம்பிலுவில் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு எஸ். கணேசபிள்ளையும் சிறப்பு விருந்தினர்களாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தம்பிலுவில் திருக்கோவில் பிரதேசப் பொறுப்பாளர் திரு மதனும் கல்வியதிகாரி ஜனாப். எம் எல். ஏ. காதரும் கலந்து கொண்டனர்.

# கண்டிக்காடு படுகொலையை கண்டித்துப் பொதுக்கூட்டம்

(அச்சுவேலி)

இந்திய இராணுவத்தின் புத்தூர் கண்டிக்காடு படுகொலையை கண்டித்து மாபெரும் பொதுக் கூட்டம் கண்டிக்காடு தகரம் பிள்ளையார் கோயிலடியில் இன்று மாலை நடைபெறும்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் வலிகாமம் பொறுப்பாளர் திரு இ. ஆஞ்சநேயர் தலைமையில் நடைபெறும் இப் பொதுக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் திருமதி அடல் பாலசிங்கம், தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள்முன்னயின் செயலதிபர் திரு யோகரத்தினம் (யோகி) முன்னணியின் முக்கிய பேச்சாளர் திரு காசியானந்தன் மகளிர் பிரிவு பொறுப்பாளர்கள் செல்வி ஜெயா, செல்வி மாலினி உட்பட பலர் உரையாற்றுவர்.

கண்டிக்காடு படுகொலைகள் 1989ஆம் ஆண்டு மே மாதம் இந்திய அமைதிப் படையினராலும் ஈ. பி. ஆர். எல். எவ் இயக்கத்தினராலும் மேற்கொள்ளப்பட்டது.

இப்படுகொலைச் சம்பவத்தில் கண்டிக்காடு வாதரவத்தை பகுதியை சேர்ந்த ஒன்பது அப்பாவிப் பொது மக்கள் சித்திரைவதை செய்யப்பட்டு வைக்கோல் கும்பிக்குள்ளும் குடிசைக்குள்ளும் போட்டு தீமூட்டி எரிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தின் போது ஏற்பட்ட நேரடி மோதலில் கப்டன் நேரு. லெப்டினட் குட்டி ஆகிய இரண்டு வீர வேங்கைகள் வீரமரணமடைந்தனர்.

இந்திய இராணுவத்தின் அடாவடித்தனத்தால் அந்தப் பகுதியில் இருந்த பத்துக்கு மேற்பட்ட வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டது. விவசாய உபகரணங்கள் உற்பத்திப் பொருட்கள் உட்பட லட்சக் கணக்கான சொத்துகள் நாசமாக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

(16)

## தவறுதல்

நேற்றைய எமது பத்திரிகையில் அமரர் சே. கந்தசாமி (இராசு) அவர்களின் முதலாம்ஆண்டு நினைவஞ்சலியில் மலர்வு 27. 3 1939 ற்கு பதிலாக 1989 என வந்து விட்டது.

தவறுதலுக்காகவருந்துகிறோம்

## தொழுகை ஆரம்பம்

(அட்டாளைச்சேனை)

அட்டாளைச்சேனை தைக்கா நகர் பள்ளி வாசலில் கடந்த மாதம் 18ஆம் திகதி வெளிக்கிழமை ஜூம்ஆத்தொழுகை ஆரம்பமானது.

பெருமளவு மக்கள் இதில் இம்முறை கலந்து கொண்டதும் குறிப்பிடத் தக்கது. பள்ளிவாசல் பேஷ் இமால் மௌலவி ஜனாப் எஸ். எல். றஸ்ஸாக் ஆரம்ப குப்தா பிரசங்கத்தை நிகழ்த்தினர்.


# விநியோகஸ்தர்கள்தேவை

## கில்ஸ் பூட்ஸ் புறடக்ஸ்

கில்ஸ் பூட்ஸ் புறடக்ஸ் ஸ்தாபனத்தார் அவர்களின புகழ் பெற்ற மாமிச உணவு தயாரிபபுக்களை பின்வரும் இடங்களில் விநியோகிபபதறகு விநியோகஸ்தர்கள் தேவை

- திருகோணமலை
- மன்னார்
- வவுனியா

இவ் செயதுகொள்ள விரும்பும் விநியோகஸ்தர்கள் குளிரூட்டுப அறைகளை அல்லது மாமிச உணவுத் தயாரிப்புக்களை சேமித்து வைபபதற்குப போதுமான தொகை குளிரூட்டு சாதனப் பெட்டிகளை வைத்திருத்தல் வேண்டும் அத்துடன வங்கி உத்தரவாதம் கொடுக்கக்கூடியவர்களாக இருக்க வேண்டும்

விருபபமுடையவர்கள் தங்களின் வியாபார விபரங்களுடன் ஏழு தினங்களுக்குள விண்ணப்பிக்கவும்.



சந்தைப்படுத்தல் முகாமையாளா

**கில்ஸ் பூட்ஸ் புறடக்ஸ் லிமிட்டெட்**

130, கிளௌனி வீதி

கொழும்பு - 2



## தேவை

ஸ்ருடியோ வேலையில் பயிற்சிபெற விரும்பும் பெண்கள், 12 06.90க்கு முன் நேரில் தொடர்பு கொள்ளவும் A/L படித்த, யாழ். நகர எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது.

**கொழும்பு ஸ்ருடியோ**

55, மணிக்கூட்டு வீதி,

யாழ்ப்பாணம்.

(B/1097)


# இன்றைய திரைவானில்

**வின்ஸர்(யாழ்)**
தினசரி 4-00, 6-45, 9-45
சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் [illegible]
**இது நம்ம ஆளு**
(புதிய வெளியீடு)

**நியூ சாந்தி (யாழ்)**
தினசரி 4.45, 7.00, 9.30
சனி ஞாயிறுவிடுமுறை நாட்களில்
10-30, 2-30, 4-45, 7-00, 9-30
வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் ஹாஸ்யச் சித்திரம்
**STUCK ON YO U**
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)
(Colour)

**லிடோ (யாழ்)**
தினசரி 4-00, 6-30, 9-30
சனி, ஞாயிறு, விடுமுறை நாட்களில்
10-30, 2-30, 6·30, 9-30
(Fantas ic Film, Suitable for Childrens)
**CRAZY JUNGLE ADVENTURES**
அடுத்த வெளியீடு
மாவீரன்
(புதிய பிரதி)

**வெலிங்டன் (யாழ்)**
4-00 7-00 9-30
**A NIGHT ON THE TOWN**
8ஆம் திகதி முதல்
ஜனாதிபதியின் தங்கப் பதக்கம் பரிசு பெற்ற
விசுவின்
**சம்சாரம் அது மின்சாரம**
(கலர்)

**மனோகரா - (யாழ்)**
தினசரி 4.00, 6.30, 9.30
சனி. ஞாயிறு
10-30, 2-30, 6.30 & 9.30
சுப்பர் ஸ்ரார் ரஜனி கௌதமி, ரகுவரன், S. S. சந்திரன், பேபி ஷாலினி, சரளா நடித்த
**ராஜா சின்ன ரோஜா**
கவுஸ்புல் காட்சியாக வெற்றிநடை போடுகிறது.

**ஹரன் - (யாழ்)**
தினசரி 4·00, 7.00, 9.30
சனி, ஞாயிறு நாட்களில்
10.30, 2.30, 6.30, 9.30
விஜயகாந், ரேகா, செந்தில் நடித்த
**சொல்வதெல்லாம் உண்மை**
(B 878)

**ராஜா (யாழ்)**
தினசரி 4 00, 7 00, 9·45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில் 4 காட்சிகள்
மோகன், ரேவதி, கார்த்திக் நடித்த
**மௌனராகம்**
குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்.
அடுத்த புதிய வெளியீடு
கமல், கௌதமி நடித்த
அபூர்வ சகோதரர்கள்


# தரமான 'சேட்டிங்' துணி வகைகளை உற்பத்தி செய்வதில் யாழ்நகரில் தன்னிகாற்றவர்கள்

130, கிளெனி வீதி
கொழும்பு-2

கொழும்பு ஸ்ருடியோ
55, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
(B/1097)

சம்சாரம் அது
மின்சாரம்
(கலர்)

அடுத்த புதிய வெளியீடு
கமல், கௌதமி நடித்த
அபூர்வ சகோதரர்கள்

தரமான 'சேட்டிங்' துணி வகைகளை உற்பத்தி செய்வதில்
யாழ்நகரில் தன்னிகரற்றவர்கள்

# சீமா சில்க் இன்டஸ்றீஸ்

தரத்தின் சின்னம்

Ceyma

# CEYMA SILK INDUSTRIES

THIRUNELVELY, JAFFNA.

(B-1095)

# A/L இரசாயனம்

## பரீட்சை மாதிரி வினாக்களும் விடைகளும்

## போது இரசாயனம் - அசேதன இரசாயனம்

அமைப்பு வடிவ வினாக்கள்

## தொடர் - 2

## சத்தீஸ்

### பரீட்சை மாதிரி வினாத்தாள் 1 இன் விடைகள்

2\. (அ) (a) சேர்வையிலுள்ள $W_{H_2} = \frac{1345 \times 2}{22414} = 0.12g$

$\therefore W_M = 1\cdot24 - 0\cdot12 = 1\cdot12g$

1 g $H_2$ உடன் சேரும் M இன் திணிவு சமவலுத்திணிவு (E) ஆகும்.

$E = \frac{1\cdot12 \times 1}{0\ 12} = 9\cdot33.$

(b) ஐதரைட்டின் மூ. கூ. சூ. $MH_n$ என்க.

சூத்திர நிறை = மூ. கூ. நி.

$MH_n = 62$ ................ n என்பது M இன் வலுவளவு.

$E \times n + 1 \times n = 62$ ................ ( $E \times n$ = M இன் சா. அ. தி. )

$9\ 33n + n = 62$

$\therefore n = 6$

$\therefore$ ஐதரைட்டின் சூத்திரம் $MH_6$

c. M இன் வலுவளவு = n = 6

d. M இன் சார் அ. தி. = ச. வ. தி. $\times$ வலுவளவு

$= 9\cdot33 \times 6 = 55\cdot98$

e. சரியான மூ. கூ. சூ. $M_x\ H_y$ என்க.

x = 1 ஆகவோ அல்லது 3 ஆகவோ இருக்கமுடியாது.

$\therefore$ x = 2 ஆகும். ஆகவே மூ. கூ. சூ. $C_2H_y$ ஆகும்.

சூத்திர நிறை = மூ. கூ. நி.

$28 \times 2 + 1y = 62$

$y = 6$

$\therefore$ சரியான மூ. கூ. சூ. $M_2H_6$ ஆகும்.

(f) M இன் வலுவளவு = $\frac{\text{சா. அ. தி.}}{\text{ச. வ. தி.}} = \frac{28}{7} = 4$

$\therefore$ ஐதரைட்டின் கட்டமைப்பு

$$\begin{array}{ccccccc} & & H & & H & & \\ & & | & & | & & \\ H & - & M & - & M & - & H \\ & & | & & | & & \\ & & H & & H & & \end{array}$$

ஆ. $Cu + H_2SO_4 \rightarrow CuSO_4 + SO_2$

Ox.No: O +6 +2 +4

$Cu - 2e \rightarrow Cu^{++}$ ............ (1) ஒட்சியேற்றம்

$S^{6+} + 2e \rightarrow S^{4+}$ ............ (2) தாழ்த்தல்

$Cu + S^{6+} \rightarrow Cu^{++} + S^{4+}$

பீசமானத் தாக்கத்தில் Cu முழுக்க $Cu^{++}$ ஆக ஒட்சியேற்றப்படும். 1 mol $H_2SO_4$, $SO_2$ ஆகத் தாழ்த்தப்படும்' 1 mol $H_2SO_4$ $Cu^{++}$ உடன் சேர்ந்து இருக்கும். (தாக்கத்துக்கு 2 mol $H_2SO_4$ தேவைப்படும்)

$\therefore Cu + 2H_2SO_4 \rightarrow CuSO_4 + SO_2 + 2H_2O.$

# ஆயுதக்குறைப்புபேச்சுக்கள்மத்தியில் சீனா ஐதரசன் குண்டு பரிசோதனை

(பீக்கிங்)

சீனா கடந்த சனிக்கிழமை இரண்டாவது சந்திதி ஐதரசன் குண்டு ஒன்றை வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது.

சீனாவின் வடமேற்குப்பகுதியில் இப்பரிசோதனை நடாத்தப்பட்டதாக ஹொங்கொங்கில் இருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியும் சோவியத்ஜனாதிபதியும் அணுவாயுதக்குறைப்புதொடர்பாக பேச்சு நடாத்தி ஒப்பந்தம் செய்து கொள்ளும் இந்ததருணத்தில் சீனா இவ்வாறு செய்துள்ளது.

அமெரிக்கா,ரஷ்யாபோன்ற வல்லரசு நாடுகளைப் போல சீனா இக்குண்டு தயாரிப்பில் வல்லமை படைத்தது என்பதை இச்சம்பவம் காட்டியுள்ளது.

சீனா தனது முதலாவது அணுகுண்டு பரிசோதனையை 1964இல் நடாத்தியது.

1950 இல் மாசேதுங் இருந்தபோது சோவியத்தின் உதவியுடன் சீனா அணுவாயுத உற்பத்தியில் ஈடுபடத் தொடங்கியது.

சீனாவில் அணுஉற்பத்திதிட்டத்தில் ஈடுபடும் பெரும்பாலான விஞ்ஞானிகள் அமெரிக்காவில் கல்வி கற்றதும் குறிப்பிடத்தக்கது.

## தென் பசுபிக்கில் பிரான்ஸ் அணுகுண்டு சோதனை

(பாரிஸ்)

தென் பசுபிக் கடல் பகுதியில் வைத்து கடந்த சனிக்கிழமை பிரான்ஸ் அணிகுண்டு ஒன்றை வெடித்து பரிசோதித்தது.

இதுவரை பிரான்ஸ் நூற்றுக்கும் மேற்பட்ட அணுகுண்டு பரிசோதனைகளை நடாத்தியமையும் குறிப்பிடத்தக்கது.

அணுகுண்டு பரிசோதனை நடைபெற்ற இடத்துக்கு பிரான்ஸ் ஜனாதிபதி மிட்டரன்ட் விஜயம்செய்திருந்தார்.

இந்த அணுகுண்டு பதினைந்து கிலோ தொன் நிறை கொண்டது என பிரான்ஸ் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

1960இல் பிரான்ஸ் முதன் முதலாக அணுகுண்டு பரிசோதனையை நடாத்தியது.

## தலாய்லாமா பாப்பரசர் சந்திப்பு

(வத்திக்கான்)

தலாய்லாமா கடந்த வெள்ளியன்று பாப்பரசர் ஜோர்ச் போலை வத்திக்கானில் சந்தித்தார். இச்சந்திப்புக்கும் அரசியலுக்கும் தொடர்பில்லை என்றும், இச்சந்திப்பு சமய அடிப்படையிலானதென்று வத்திக்கான் வட்டாரங்கள் தெரிவித்தன.

54வயதான தலாய்லாமா திபேத்திலிருந்து வெளியேற்றப்பட்டபின், 1989இல் சமாதானத்துக்கானநோபல்பரிசை பெற்றார்.

30நிமிடங்கள் இடம்பெற்ற இச் சந்திப்பின்போது பாப்பரசரும், திபேத்தியரின் ஆன்மீகத் தலைவரான தலாய்லாமாவும் உலக சமாதானம், சமயம் தொடர்பான விஷயங்கள் பற்றி உரையாடியதாக வத்திக்கான் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

தலாய்லாமாவின் ஐரோப்பிய சுற்றுலாவை விரும்பாத சீனாவைப் பகைத்துக் கொள்ளாத வகையில் வத்திக்கான் நடந்துகொண்டது.

1959இல் திபேத்தில் சீனாவின் ஆட்சிக்கு எதிரான கிளர்ச்சியின்போது சீன இராணுவம் தலையிட்டுக் கிளர்ச்சியை அடக்கி, திபேத் நாட்டின் ஆன்மீகத் தலைவரும், அரசியல்தலைவருமான தலாய்லாமாவை நாட்டைவிட்டு விரட்டியது.

சீனாவில் வாழும் கத்தோலிக்கர் தொடர்பாக சீனாவுக்கும் வத்திக்கானுக்குமிடையில் உறவு முறைகள் திருப்திகரமாக இல்லையென்றாலும் சீனாவுடன் மேலும் பகைத்துக்கொள்ளாமல் வத்திக்கான் நடந்துவருகிறது.

பாப்பரசரும், தலாய்லாமாவும் சந்திப்பது இது ஐந்தாவது தடவையாகும்.

## சோவியத் - அமெரிக்க பேச்சு முன்னேற்றம் காணப்படுகிறது

(வாஷிங்டன்)

நெடுந்தூர அணுவாயுதக் குறைப்பு இருதரப்பு வர்த்தகத்தின் முன்னேற்றம் குறித்து சோவியத் ஜனாதிபதி கொர்பசேவும், அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும் ஒப்பந்தம் செய்த பின்னர் காம்டேவிற் விடுமுறை இல்லத்திற்கு சென்று பேச்சுக்களை ஆரம்பித்துள்ளனர்.

ஐரோப்பாவில் படைக்குறைப்பு சம்பந்தமான பேச்சுக்களில் முன்னேற்றம் உண்டு என்றும் சோவியத் வெளியுறவு அமைச்சர் எட்வேட்செவநாட்சே கூறியுள்ளார்.

சோவியத் யூதர்கள் இடம் பெயர்ந்து செல்வது, ஆப்கானிஸ்தான், கம்போடியா போன்ற பிரச்சினைகள் குறித்து இருவரும் விவாதித்து பேசினார்கள்.

சோவியத் யூனியனுடன் போல்புக் குடியரசு இணைவது, நேட்டோ அணியில் ஜேர்மனி உறுப்பு நாடாக இணைவது குறித்து இருதரப்பிலும் கருத்து வேறுபாடு நிலவுவதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் கூறினார்.

## வல்லரசு நாடுகளினால் ஆசிய நாடுகளில் கெடுபிடி

### - சோவியத் ஜனாதிபதி

(வாஷிங்டன்)

ஆசிய நாடுகளின் விவகாரங்களில்வல்லரசுநாடுகளிடையே உறவுகளையும் ஒத்துழைப்பையும் ஏற்படுத்த வேண்டும் என்று சோவியத் ஜனாதிபதி கொர்பசேவ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷுடன் நடாத்தியஉச்சிமாநாட்டு முடிவில் செய்தியாளரிடம் அவர் பேசினார்.

ஆசிய பிராந்தியத்தில் வல்லரசு நாடுகள் சில மோசமான கெடுபிடி யுத்தங்களில் ஈடுபட்டதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

தனது சீர்திருத்தக் கொள்கைக்கு சோவியத் மக்கள் ஆதரவு வழங்க வேண்டும் எனவும் கூறினார்.

## எவ்-16யுத்த விமானங்கள்; அமெரிக்காவிடம்கோரிக்கை

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் எவ்–16 ரக யுத்த விமானங்களுக்குரிய உதிரிப்பாகங்களை பாகிஸ்தானிலேயே தயாரிக்கவுள்ளது.

1987இல்அமெரிக்கா சுமார் நாற்பது எவ் 16 ரக யுத்த விமானங்களைப் பாகிஸ்தானுக்கு வழங்கியது. மேலும் அறுபது இதே ரக விமானங்களை தந்துதவுமாறு பாகிஸ்தான் பிரதமர் பெனாசிர் பூட்டோ அமெரிக்காவிடம் கோரியுள்ளார்.

இதே சமயம் பாகிஸ்தான் சீனாவிடமிருந்து எவ் 6 ரக ஜெற் விமானங்களைக் கேட்டுள்ளது.

ஆசியாவில்இந்தோனேஷியாவும், தென் கொரியாவும் எவ்-16 ரக விமான உதிரிப் பாகங்களைதயாரித்துவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## வருடாந்த பொதுக் கூட்டம்

(பாங்கொக்)

ஆசியா மற்றும் பசுபிக் நாடுகளின் பொருளாதார சமுக ஆணைக்குழுவின் 46 ஆவது வருடாந்தக் கூட்டம் நேற்று இங்கு ஆரம்பமானது.

பத்து நாட்கள் நடைபெறும் இம்மாநாட்டில் பிராந்திய ஒத்துழைப்பு, சமூக வளர்ச்சி, பொருளாதார திட்டம் என்பன குறித்து இங்கு ஆராயப்படும்.

வவுனியாவில்

H H

ஆ. $\underline{Cu} + H_2\underline{S}O_4 \rightarrow \underline{Cu}SO_4 + \underline{S}O_2$

Ox.No: O +6 +2 +4

$Cu - 2e \rightarrow Cu^{++}$ ………… (1) ஒட்சியேற்றம்

$S^{6+} + 2e \rightarrow S^{4+}$ ………… (2) தாழ்த்தல்


$Cu + S^{6+} \rightarrow Cu^{++} + S^{4+}$

பீசமானத் தாக்கத்தில் Cu முழுக்க $Cu^{++}$ ஆக ஒட்சியேற்றப்படும். 1 mol $H_2SO_4$, $SO_2$ ஆகத் தாழ்த்தப்படும்' 1 mol $H_2SO_4$ $Cu^{++}$ உடன் சேர்ந்து இருக்கும். (தாக்கத்துக்கு 2 mol $H_2SO_4$ தேவைப்படும்)

$\therefore Cu + 2H_2SO_4 \rightarrow CuSO_4 + SO_2 + 2H_2O.$

## பரீட்சை மாதிரி வினாத்தாள் - 2

(ஒவ்வொரு வினாக்களுக்கும் மொத்தம் 100 புள்ளிகள்)




1. ஆவர்த்தன அட்டவணையின் ஒரு பகுதி மூலகங்கள் A தொடக்கம் K வரை உள்ள எழுத்துக்களால் குறிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ளது. பின்வரும் வினாக்களுக்கு A தொடக்கம் K வரையுள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி விடை தருக.

அ. (i) இரண்டு ஒட்சியேற்ற நிலையில் இருக்கும் சேர்வைகளை உருவாக்கும் ஒரு மூலகத்தைத் தருக.
 (ii) இம் மூலகத்தின் ஒட்சைட்டின் சூத்திரங்களை எழுதுக.
 (iii) D இன்வலுவளவு ஒழுக்கு இலத்திரன் நிலையமைப்பு என்ன?
 (10 புள்ளி)

ஆ. (i) அயன் சேர்வைகளை உருவாக்கக் கூடியதும், இச்சேர்வையின் நேர் அயனில், அல்லது எதிர் அயனில் இருக்கக்கூடிய ஒரு மூலகத்தை தெரிக.
 (ii) இது போன்ற இரு அயன்களின் சூத்திரத்தைத் தருக.
 (a) எதிர் அயன் (b) நேர் அயன் (2+4+4=10 புள்ளி)

இ. (i) மிகவும் தாழ்ந்த கொதிநிலை உடைய மூலகம் எது? இத்தாழ்வான கொதி நிலைக்கு என்ன காரணம் காட்டுவீர்? (2+3=5 புள்ளி)
 (ii) A தொடக்கம் F வரை உள்ள மூலகங்களில் ஒரு மூலகத்தின் அணு எண் 36 இலும் குறைவானது. வளிமண்டல அமுக்கத்தில் இதன் கொதிநிலை 239K வாயு நிலையில் நிறமானது ஆயின் இம்மூலகம் எது? உமது முடிவிற்கான காரணம் என்ன? (2+3=5 புள்ளி)

ஈ. (i) ஈரியல்புள்ள ஒட்சைட்டை உருவாக்கும் மூலகம் எது?
 (ii) இம் மூலகத்தின் ஒட்சைட்டின் சூத்திரத்தைத் தருக. (3+2=5 புள்ளி)

உ. (i) எவ்விரு மூலகங்கள் இணைந்து அயன் தன்மை கூடிய சேர்வையை விளைவாக்கும்? ஏன்? இதன் இலத்திரன் கட்டமைப்பினை வரைக.
 (5+5+5=15 புள்ளி)

ஊ. (i) மூலக்கூற்றில் ஒரு I அணுவைக் கொண்ட I இன் மூன்று ஒட்சி அமிலங்களின் கட்டமைப்பைத் தருக. (அணுக்களைச் சூழும் இலத்திரன்கள் தேவையில்லை)
 (5+5+4=14 புள்ளி)
 (ii) இவ்வொட்சி அமிலங்களுக்கிடையே உள்ள ஒரு வேறுபாட்டினைக் குறிப்பிடுக
 (2+2+2=6 புள்ளி)

எ. மின் பகுப்பின்போது அனோட்டினால் ஐதரசன் வாயுவைக் கொடுக்கும் சேர்வையை உருவாக்கும் மூலகம் எது? எந்த நிபந்தனைகளில் இது நிகழும் எனக் கூறி இம்மின் பகுப்பின் தாக்கங்களையும் தருக.
 (4+3+4+4=15 புள்ளி)

ஏ. பின்வருவனவற்றைக் காட்ட பரிசோதனை ஆதாரம் ஒன்று தருக.
 (i) K சடத்துவமானது
 (ii) C இன் வலுவளவு ஒழுக்கில் இரண்டு இலத்திரன்கள் உண்டு.
 (5+10=15 புள்ளி)

(தொடரும்)

மீகத் தலைவரான தலாய் லாமாவும் உலக சமாதானம், சமயம் தொடர்பான விஷயங்கள் பற்றி உரையாடியதாக வத்திக்கான் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

தலாய்லாமாவின் ஐரோப்பிய சுற்றுலாவை விரும்பாத சீனாவைப் பகைத்துக் கொள்ளாத வகையில் வத்திக்கான் நடந்துகொண்டது.

1959இல் திபெத்தில் சீனாவின் ஆட்சிக்கு எதிரான கிளர்ச்சியின்போது சீன இராணுவம் தலையிட்டுக் கிளர்ச்சியை அடக்கி, திபெத் நாட்டின் ஆன்மீகத் தலைவரும், அரசியல்தலைவருமான தலாய்

## முன்னேற்றம் காணப்படுகிறது

(வாஷிங்டன்)

நெடுந்தூர அணுவாயுதக் குறைப்பு இருதரப்பு வர்த்தகத்தின் முன்னேற்றம் குறித்து சோவியத் ஜனாதிபதி கொர்பசேவும், அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும் ஒப்பந்தம் செய்த பின்னர் காம்டேவிற் விடுமுறை இல்லத்திற்கு சென்று பேச்சுக்களை ஆரம்பித்துள்ளனர்.

ஐரோப்பாவில் படைக் குறைப்பு சம்பந்தமான பேச்சுக்களில் முன்னேற்றம் உண்டு என்றும் சோவியத் வெளியுறவு அமைச்சர் எட்வேட்செவநாட்சே கூறியுள்ளார்.

சோவியத் யூதர்கள் இடம் பெயர்ந்து செல்வது, ஆப்கானிஸ்தான், கம்போடியா போன்ற பிரச்சினைகள் குறித்து இருவரும் விவாதித்து பேசினார்கள்.

சோவியத் யூனியனுடன் போல்புக் குடியரசு இணைவது, நேட்டோ அணியில் ஜேர்மனி உறுப்பு நாடாக இணைவது குறித்து இருதரப்பிலும் கருத்து வேறுபாடு நிலவுவதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் கூறினார்.

பாகங்களை தயாரித்துவருவதை றமையும் குறிப்பிடத்தக்கது.

## வருடாந்த பொதுக் கூட்டம்

(பாங்கொக்)

ஆசியா மற்றும் பசுபிக் நாடுகளின் பொருளாதார சமூக ஆணைக்குழுவின் 46 ஆவது வருடாந்தக் கூட்டம் நேற்று இங்கு ஆரம்பமானது.

பத்து நாட்கள் நடைபெறும் இம்மாநாட்டில் பிராந்திய ஒத்துழைப்பு, சமூக வளர்ச்சி, பொருளாதார திட்டம் என்பன குறித்து இங்கு ஆராயப்படும்.

## வவுனியாவில் அளவை களுக்கு சீல் வைப்பு

(வவுனியா)

நாளை புதன் கிழமை வவுனியா கச்சேரி நிறுவை அளவைப் பிரிவில் வைத்து தராசு, படிகளுக்கான முத்திரைகள் இடப்படும் என்று இதனுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிஒருவர் தெரிவித்தார்.

விரைவில்பெற்றோல் நிரப்பு நிலையங்களுக்கும் சீல் வைக்கும் வேலை ஆரம்பமாகும் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

மக்களின் புகாரை அடுத்தே இது மேற்கொள்ளப்படுவதாகவும். இதன் மூலம் தராசு படி மற்றும் அளவைக் கருவிகளினால் மேற்கொள்ளப்படும் மோசடிகளைக் கட்டுப்படுத்தலாம் என்றும் அவர் தெரிவித்தார். (தி)

## புத்தகங்களில் பிழை

(கொழும்பு)

தற்போதுள்ள சிங்களப் புத்தகங்களில் பல பிழைகள் இருப்பதாக கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இதனையடுத்து இவற்றை மீளாய்வு செய்வதற்கு பிரபல கல்விமான்கள் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

## புதிய ரக தென்னங் கன்று

(கிளிநொச்சி)

மூன்று வருடங்களில் காய்க்கக் கூடிய தென்னை நாற்று மேடைகளை தென்னை அபிவிருத்திச் சபை தென்னைப் பயிர்ச்செய்கையாளருக்கு வழங்கவுள்ளது.

கிளிநொச்சி, அச்சுவேலி, அளம்பில் ஆகிய இடங்களில் நாற்று மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன. சுமார் 50 ஆயிரம் கன்றுகள் வழங்கப் படவுள்ளன.

## வாக்காளர் இடாப்பு பதிவு ஒரு இடத்திலே பதியவேண்டும்

(கொழும்பு)

தற்போது நடைபெறும் வாக்காளர் இடாப்பு பதிவு வேலைகளில் ஒருவர் ஒரு இடத்தில் மட்டுமே தமதுபெயரைப் பதிவு செய்ய வேண்டும் என்று தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

சிலர் தாம் தொழில் புரியும் இடங்களிலும், சொந்த ஊர்களிலும் தமது பெயர்களைப் பதிவு செய்துள்ளது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

வீடுகளில் தங்கியிருப்பவர்களின் நிரந்தரமான விலாசம் இப்பதிவின்போது குறிப்பிடப் படவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் பெயர் பதிவு கண்டுபிடிக்கப்பட்டால் அவர்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஆணையாளர் எச்சரித்துள்ளார்.

## பாதிப்படைந்த மீனவருக்கு நஷ்டஈடு வழங்க நடவடிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மீன்நோய் காரணமாக தொழில் இழந்துள்ள மீனவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க அரச அதிபர் திரு. ஆர். யோகநாதன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அரச அதிபரின் பணிப்புரையின் பிரகாரம் சமூக சேவைகள் உதவிப்பணிப்பாளர் ஆர் தியாகராசா அண்மையில் சமூக சேவைகள் அமைச்சு நிவாரணத்திற்குரிய மேலதிக பணிப்பாளர் எஸ் எஸ் வெத்தமுனியைச் சந்தித்து இது தொடர்பாக விளக்கியுள்ளார்

இச் சந்திப்பின் பிரகாரம் நிவாரணம் வழங்குவதற்கான முடிவு எடுப்பதற்காக பின்வரும் விபரங்களை அவர் கோரியுள்ளார்.

★ மீன் நோய் தொடர்பான ஆய்வு அறிக்கை.

★ இந்நோய் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள்.

சூழல் பாதுகாப்பு சபைக்கு அறிவிக்கப் பட்டால் அதன் பிரதி.

★ உதவி அரச அதிபர் பிரிவு ரீதியாகப் பாதிக்கப்பட்ட குடும்ப விபரம், இவர்களில் சனசக்தி பெறுவோர் விபரம் கோரப்பட்டுள்ளது. (37)

## அமெரிக்க டாலர் கடத்தல் விமான நிலையத்தில் முறியடிப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து பயணமாக விருந்த இந்தோனிஷியா பிரஜைஒருவரிடம் இருந்து பதினாறாயிரம் அமெரிக்டாலர் கைப்பற்றப்பட்டன.

தனது உடையில் இவற்றை இவர் மறைத்து வைத்திருந்த போது கண்டுபிடிக்கப்பட்டார்.

[illegible]க்கு சுங்க அதிகாரிகள் [illegible]தா[illegible]பது லட்சம் ரூபா [illegible]ாதம் விதித்தனர்.

மற்றொரு சம்பவத்தில் பத்தாயிரம் அமெரிக்க டாலர்களும் தொண்ணூறாயிரம் இலங்கை நோட்டுக்களும் பதினோராயிரம் ஜேர்மன் நாணயமும்ஒரு வர்த்தகரிடம் இருந்து கைப்பற்றப்பட்டன.

## ஐஸ்கிறீம் வியாபாரிக்கு அபராதம்

(கொழும்பு)

சுகாதாரத்துக்கு தீங்கு விளைவிக்கும் ஐஸ்கிறீம் விற்பனை செய்த ஐஸ்கிறீம் தயாரிப்பு விற்பனையாளர் இருவருக்கு களுத்துறை நீதவான் ஐநூறுரூபா அபராதம்விதித்து தீர்ப்பளித்தார்.

## இரு இலங்கையருக்கு பரிசுகள்

(கொழும்பு)

அமெரிக்காவில் உள்ள டிரைடன் கலைக் கல்லூரி நடாத்திய சர்வதேச கவிதைப் போட்டியில் இலங்கையைச் சேர்ந்த இருவருக்கு பரிசுகள் கிடைக்கவுள்ளன. அதில் ஒருவர் தமிழர், மற்றவர் சிங்களவரார்.

மூன்று பரிசுகள் வழங்கப் படுகிறது.

## மட்டக்களப்பு கிராமியக் கலைவிழா

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட கிராமிய கலைவிழா எதிர் வரும் 8ஆம் திகதி நகரமண்டபத்தில் நடைபெறும்.

அரச அதிபர் திரு. யோகநாதன் தலைமை வகிப்பார்.

பிரதம அதிதியாக வட-கிழக்கு மாகாணசபை செயலாளர்திரு.எஸ்.கணேசநாதன் கலந்து கொள்கிறார். (37)

## செய்திக்கு மறுப்பு

(புதுடில்லி)

காஷ்மீர் தீவிரவாதிகளுக்கும் இந்திய அரசுக்கும் இடையே பேச்சு நடாத்துவதற்கான ஏற்பாடு செய்யுமாறு இந்திய அரசு கேட்டதாக வெளியான பத்திரிகை செய்திகளை மத்திய ரயில்வே அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் மறுத்துள்ளார்.

# வெளிநாட்டு முகவர்களால் தமிழ் இளைஞர்கள் அவதி

(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு செல்வதற்காக கொழும்பில் உள்ள சில முகவர்களிடம் சுளை சுளையாக பணத்தைக் கொடுத்த பல தமிழ் இளைஞர்கள் கொழும்பில் அலைந்து திரிகின்றனர்.

இதே நேரம் ஒரு முகவர் இந்த இளைஞர்களிடம் பல லட்சம் ரூபாவை வாங்கி தலைமறைவாகியுள்ளதாக பொலிஸில் புகார்கள் செய்யப்பட்டுள்ளது.

இந்த முகவர் அனுப்பிய சிலர் வெளிநாடுகளில் இருந்து திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாகவும், சிலர் அநாதரவாக விடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இளைஞர்கள் இந்திய இராணுவ நடவடிக்கை காரணமாக நகைகளை அடகு வைத்து கொழும்புக்கு வந்து இந்தமுகவர்களிடம்பணத்தை செலுத்தியதாகவும் விசாரணைகளில் இருந்து தெரியவருகிறது.

கொழும்பில் ஒரு முகவர் தனது பெயரை தமிழர் சிங்களவர் என வெவ்வேறு காலங்களில் மாற்றி இந்த வேலையில் ஈடுபட்டதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவருக்கு எதிராக ஐம்பதுக்கும் மேற்பட்ட புகார்கள் பொலிஸில் பதிவுசெய்யப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இந்தஇளைஞர்கள்கொழும்பில் இருக்க முடியாத நிலையிலும், அடகுவைத்தவர்களுக்கு வட்டி செலுத்த முடியாமலும் அங்குமிங்குமாகஅலைந்து திரிகின்றனர்.

## பள்ளிக்கூடங்களில் கராட்டி வகுப்புகள்

(கொழும்பு)

கராட்டியைப் பள்ளிக்கூடங்களில் அறிமுகப்படுத்தும் திட்டமொன்றை விரைவில் செயற்படுத்தக் கல்வி அமைச்சு ஆலோசித்து வருகிறது. ஸ்ரீலங்கா கராட்டி நிறுவனமும், கல்வி அமைச்சும்இணைந்து இத்திட்டத்தை அறிமுகப்படுத்தவுள்ளன.

ஸ்ரீலங்காவின் முதல் கராட்டிச் சங்கம், முதலில் கொழும்பில் நாலந்தாக் கல்லூரியில் அமைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து பல பிரபல்யமானகல்லூரிகள் கொழும்பில் கராட்டிவகுப்புகளைநடாத்த ஆரம்பித்தன. யாழ்ப்பாணத்திலும் இளவாலை புனித ஹென்றி அரசர்கல்லூரியிலும் கராட்டி வகுப்புகள் நடாத்தப்பட்டன.

கல்வி அமைச்சு கராட்டி விளையாட்டை வளர்க்கும் வகையில் ஆசிரியர்களுக்கும் கராட்டியைப் பழக்கவுள்ளது.

ஸ்ரீலங்கா பூராகவுமுள்ள சகல கல்லூரிகளிலும் கராட்டிச் சங்கங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஸ்ரீலங்கா கராட்டி நிறுவனத் தலைவர் எம். என். காசிம் தெரிவித்தார்.

## இந்துசமய அமைச்சுக்கு போதிய நிதிவசதி இல்லை

(மட்டக்களப்பு)

1983ஆம் ஆண்டு முதல் இடம்பெற்ற பல்வேறு அசம்பாவிதங்கள் வன்செயல்களினால் 613 இந்து ஆலயங்கள் சேதமடைந்துள்ளன.

இத் தகவலை இந்து சமய இராஜாங்க அமைச்சு அதிகாரியொருவர் தெரிவித்தார்.

புனரமைப்பு திட்டத்தின் கீழ் எந்தவொரு வெளிநாட்டு உதவிகளும் ஆலயப் புனரமைப்புக்கு கிடைக்கவில்லை.

மேற்படி இந்து ஆலயங்களை புனரமைக்க 25 கோடி ரூபா தேவை. அமைச்சுக்கான வருடாந்த ஒதுக்கீடு ரூபா 60 இலட்சம் மூலம் இப் பணியை மேற்கொள்ள முடியாது.

ஆலயம் ஒரு கிராமத்தின் மையம் மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகளின்போது ஆலயப்புனரமைப்புக்கும்முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் வெளிநாட்டு உதவி பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார். (37)

# இணக்கமன்று மூலமாக மக்களுக்கு பயன்கள் உண்டு

(கரவெட்டி)

''இந்த மண்ணின் மேன்மையை உயர்த்துவதோடு இந்த மண்ணில் வாழுகின்ற மக்களின் ஒழுக்க பண்பாடுகளையும் வளர்த்துச் செல்லும் பண்பாட்டுறப்பத்தி நிலையமாக இணக்க மன்றுகள் நிகழ வேண்டும் அவ்வாறு நிகழ்ந்தால் எமது இலட்சியத்தை வெகு துரிதமாகவும் சிறப்பாகவும் சென்றடைய முடியும்''

இவ்வாறுவிடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி வடமராட்சி அமைப்பாளர் திரு. அரசண்ணா இணக்க மன்று உறுப்பினர் தெரிவுக் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரை நிகழ்த்தினார்.

உடுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவு மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் திரு. அரசண்ணா தொடர்ந்து பேசுகையில்

''இவ்விணக்க மன்றுகள் பரஸ்பரம் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு செயற்படும் ஸ்திரம்மிக்க சக்தியாகத் திகழ்ந்து மக்களை ஓரணியில் திரட்டும்ஊடகமாகவும் செயற்பட வேண்டும்.

தன்னைப் பற்றியும் தனது குடும்பத்தைப்பற்றியும் சிந்தித்து தனது நியாயம் தான் பெரிதென நினைத்து வாழ்பவர்களையும் அவ் குறுகிய நோக்கத்திலிருந்து மீட்டெடுக்க வேண்டும் அவர்களுக்கு அடுத்தவரின் நியாயத்தையும் நலனையும் உண்மை நிலையையும் விளங்க வைக்க வேண்டும் அனைவரையும் மானிடத்தின் உச்ச நிலைக்கு அழைத்துச்செல்ல இவ் இணக்க மன்றுகள் உதவி புரிய வேண்டும்'' என்றார்.

இவ்வைபதத்தில்கரவெட்டி உதவி அரசாங்க அதிபர்பிரிவு மக்கள் முன்னணி உதவிப் பொறுப்பாளர்திரு.கந்தையா பேசுகையில் இணக்க மன்ற உறுப்பினர்கள் மக்களின் பிரச்சினைகளை அன்புடனும்பண்புடனும் அனுதாபத்துடனும் தீர்த்துக்கொள்ள வேண்டும்'' என்றார்.

## மந்திகை வைத்தியசாலையில் வைத்தியர், தாதிகள் தட்டுப்பாடு

(வல்வெட்டித்துறை)

மந்திகை அரசினர் ஆதார வைத்திய சாலையில் வைத்தியர்கள், தாதிகள், ஊழியர்கள் பெருந்தட்டுப்பாடு நிலவுகிறது இது விடயமாக மேற்படி வைத்தியசாலை நிர்வாகம் சுகாதார அமைச்சுடன் நேரில் சென்று முறையிட்டும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படிஊழியர்கள் தட்டுப்பாட்டினால் வாட்நிர்வாகம் முதல் தனியார் நோயாளர் வரை பெரும் பாதிப்பிற்குள்ளாகின்றார்கள்.

சில வேளைகளில் ஒரு வைத்தியர் மட்டுமே வெளியார் நோயாளர்களையும் வாட் நோயாளர்களையும் ஒரே நேரம் பார்க்க வேண்டிய நிலையிலும் உள்ளதைக் காணக்கூடியதாக இருந்தது.

மேலும் ஓவற்ரைம் வேலைகள் பார்ப்பதற்கும் திணைக்களஅனுமதியின்மையால் பல மேற்றன்மார் விடுமுறையினைப் போட்டுவருகின்றார்கள் இத்தட்டுப்பாடு நீடிக்கும் பட்சத்தில் ஊழியர் முதல் வைத்தியர்கள் வரை வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கலாம் எனவும் தெரிய வருகின்றது. (68)

## பாடசாலையில் சைக்கிள் லைசன்ஸ்

மட்டக்களப்பு மாநகரசபையினால் பாடசாலைகளில் வைத்து மாணவர்களுக்கு சைக்கிள் லைசன்ஸ் வழங்கும் திட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது.

மாணவர்களின் நலன் கருதி இத்திட்டம் அமுல் செய்யப்படுவதாக மாநகரசபை ஆணையாளர் திரு கே. கார்த்திகேசு தெரிவித்தார். (37)

## மலத்தியோன் அருந்தினார்

(வவுனியா)

வவுனியா வைரவர்புளியங்குளத்தில் தெய்வேந்திரன் (வயது 30) என்பவர் மலத்தியோன் தூளை உட்கொண்டு பாதிக்கப்பட்ட நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அண்மைக் காலமாக வவுனியா பகுதியில் தற்கொலை முயற்சிகளும்,அவற்றால் ஏற்படும் இழப்புகளும் அதிகரித்துக் காணப்படுகின்றன. (தி

# திருமலை மக்கேசியர் ஸ்ரேடியம் புனரமைப்பிற்கு ரூபா 2,00000

(களுவாஞ்சிக்குடி)

திருக்கோணமலை 'மக்கேசியர்' ஸ்ரேடியமே்இலங்கையில் முதன் முதல் ஸ்தாபிக்கப்பட்டது.இந்த ஸ்ரேடியத்தை இந்திய அமைதிகாக்கும் படையினர் முழுமையாகப் பயன்படுத்தினர். இவர்கள் இதை பயன்படுத்தியதால் ஏற்பட்டசேதம் ரூபா இரண்டு லட்சத்திற்கு மேல் என மதிப்பிடப்பட்டுள்ளது.இந்த ஸ்ரேடியத்தின் அவசியத்தை உணர்ந்த திருக்கோணமலை அரசாங்க அதிபர் இதைத் திருத்துவதற்கென ரூபா இரண்டு இலட்சத்தை ஒதுக்கியுள்ளார், திருத்த வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட இருக்கின்றது. (45)

## இரு பத்திரிகையாளர் சுட்டுக்கொலை

(இஸ்லாமாபாத்)

பத்திரிகையாளர்கள் இருவர் பாகிஸ்தானில் சுட்டுக் கொல்லப்பட்டனர். இங்குள்ள தபால்கந்தோர் ஒன்றில் செய்திகளை அனுப்பி விட்டு வெளியே வரும்போது மறைந்திருந்த சிலர் இவர்களைச் சுட்டுக் கொன்றனர்.

## வீர வணக்கம்



லெப். பக்கி (ப. நந்தகுமார்)
(நாவற்குழி)

வீர ஜனனம்: 7. 9. 1971 — வீர மரணம் 9. 1. 1990

தமிழனது பூமியிலே
வேண்டாத வெறியாட்டம்
கொடுமைதனை அறிந்து
எதிரிகளைப் பந்தாட களம் தனில்
புகுந்த மாவீரனே 'பக்கி' நீ
மரணித்தாய் என்கின்ற
மனங் கொள்ளாச் சேதியினால்
நாமடைந்த வேதனையை ஆரறிவர்?
உன் போன்ற இளம் புலிகள்
என்றென்றும் இறப்பதில்லை!

உன் பிரிவால் துயருறும்
அம்மா, அப்பா, அக்காமார், அண்ணா, தங்கைமார், தம்பி, மைத்துனர்மார், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

(R.333)


விவசாயிகளுக்கு ஓர் நற்செய்தி! BASF

மேற்கு ஜெர்மனியின் BASF நிறுவனத்தினரின்
விவசாய இரசாயனங்கள்


சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம்
மகாசபையின்
வருடாந்தப் பொதுக் கூட்டம்

இடம்; சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசக் காரியாலயம்.
404 2/1, டில்கா மேல்மாடி,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
காலம்: 07. 06. 1990 வியாழக்கிழமை காலை 9. 30 மணி
தலைவர்: திரு. நா. தங்கவடிவேல்

— தலைவர்,

உதவிகளும் ஆலயப் புனர மைப்புக்கு கிடைக்கவில்லை.

மேற்படி இந்து ஆலயங் களை புனரமைக்க 25 கோடி

டும் என்ற கருத்தின் அடிப் படையில் வெளிநாட்டு உதவி பெற நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது என்றார். (37)

நிலையிலும் உள்ளதைக் காணக்கூடியதாக இருந்தது.

மேலும் ஒவற்ரைம் வேலை கள் பார்ப்பதற்கும் திணைக்

இத்திட்டம் அமுல் செய்யப் படுவதாக மாநகரசபை ஆணையாளர் திரு கே. கார்த் திகேசு தெரிவித்தார். (37)

னியா பகுதியில் தற்கொலை முயற்சிகளும், அவற்றால் ஏற் படும் இழப்புகளும் அதிகரித் துக் காணப்படுகின்றன. (தி

என்றென்றும் இறப்பதில்லை!

உன் பிரிவால் துயருறும்
அம்மா, அப்பா, அக்காமார், அண்ணா, தங்கைமார், தம்பி, மைத்துனர்மார், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.

(R.333)


# விவசாயிகளுக்கு ஓர் நற்செய்தி! BASF

மேற்கு ஜெர்மனியின் BASF நிறுவனத்தினரின்

## விவசாய இரசாயனங்கள்

தற்போது வடபகுதியெங்கும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

வெங்காய பயிரைத் தாக்கும் நுனி கருகல், தண்டு வெளிறல் ஊதா கொப்புளநோய், தண்டு அழுகல் போன்ற நோய்களை முற்றிலும் கட்டுப்படுத்த

## பொலிராம் M பாவியுங்கள்.




தற்பொழுது வெங்காய செய்கையாளர்களால் விரும்பிப் பாவிக்கப்படும் ஓர் பூச்சிநாசினி

## பேர்fவெக்தியோன்

வெங்காயச் செய்கையில் செலவைக் குறைத்து விளைச்சலை அதிகரிக்க பேர்fவெக்தியோன் பூச்சிநாசினியை உபயோகியுங்கள்.

FINCHEM AGRO DIVISION

BASF உற்பத்திகளை "பின்கெம்" (FINCHEM) வழங்குகின்றது. சகல விவசாய இரசாயன வியாபாரிகளிடமும் நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.

**பின்லே கெமிக்கல்ஸ் அன் டைஸ் (பிரவேட்) லிமிட்டெட்.**

186, வக்சோல் வீதி, கொழும்பு - 2

(பீடை நாசினிகள் அபாயகரமானவை அவதானமாகப் பாவியுங்கள்.)

B-1019


சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம்

**மகாசபையின்**

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

இடம்; சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசக் காரியாலயம்.
404 2/1, டில்கா மேல்மாடி,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

காலம்: 07. 06. 1990 வியாழக்கிழமை காலை 9. 30 மணி

தலைவர்: திரு. நா. தங்கவடிவேல்

-- தலைவர்,
ச. மு. க. சமாசம்,

(R-327)

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு

03. 06. 1990 இல் வளர்மதி முன்னேற்றக் கழகத்தால் நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்:

முதலாம் பரிசு: (0108) துவிச்சக்கரவண்டி
J. விஜயா, ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

இரண்டாம் பரிசு: (3019) மின் விசிறி
வ. சந்திரசேகரம், கோண்டாவில் லேன், கோண்டாவில்

மூன்றாம் பரிசு: (4791) சுவர்மணிக்கூடு
ச. கிருபராஜ், நாச்சிமார்கோவிலடி, யாழ்ப்பாணம்.

-- நிர்வாகம்
வளர்மதி முன்னேற்றக் கழகம்
கொக்குவில்.

(R. 332)

'உளவளத்துணை நிலையம்' நடாத்தும்

## குறுகியகால உளவளத்துணை பயிற்சித் திட்டம்

இப் பயிற்சியைத் தொடர விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப் பயிற்சி வார இறுதி நாட்களில் ஆங்கில மொழி மூலம் நடாத்தப் படும். கிளிநொச்சி, வவுனியா, மன்னார் பகுதிகளி லிருந்து விண்ணப்பிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக் கப்படும்.

விண்ணப்பப்படிவங்களைப் பெற விரும்புவோர்:

'சாந்திகம்'
21, முதலாம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்

என்ற முகவரிக்குக் கடிதமூலமாகவோ, நேரடியா கவோ தொடர்பு கொள்ளவும். விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய இறுதித் திகதி ஆகஸ்ட் 31 1990 ஆகும்.

—நிறைவேற்றுப் பணிப்பாளர்

(R.305)

சிந்தனைக்கு

அரசியல்வாதி - ஆண்டவனையே
தட்டிக் கழித்துவிட வல்லவன்

- ஷேக்ஸ்பியர்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 05-06-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

## ஆறாவது திருத்தம் இணைக்குமா? பிரிக்குமா?

"அரசியல் அமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கு அரசு பிரயத்தனம் செய்கிறது. இச்சட்டத்தை நீக்குவதன் மூலம் நாடு துண்டாடப்படுவது தவிர்க்க முடியாமல் போகலாம் என்பதால் நாட்டுப்பற்றுள்ள மக்கள் ஒன்றுபட்டு எதிர்ப்புக் குரல் கொடுக்க வேண்டும்."

இப்படி முன்னாள் அமைச்சரும் மகாபோதி சங்கத் தலைவருமான காமினிஜயசூரியா குரல்கொடுத்திருக்கிறார்.

வகுப்புவாதம் கக்கியவர்கள் பலரும் வாய்மூடி மௌனிகளாக நிற்கும் இச்சமயத்தில் முன்னாள் அமைச்சர் ''நாட்டுப் பற்றுள்ள'' மக்கள் ஒன்றுபட்டு எதிர்ப்புக்குரல் கொடுக்கவேண்டுமென்று தூண்டிவிடுகிறார்.

காமினி ஜயசூரியா போன்றவர்களின் "நாட்டுப்பற்று" 1956 ஆம் ஆண்டிலிருந்து நாட்டை எந்த அளவுக்குக் குட்டிச் சுவராக்கிவிட்டதென்பதை இன்னமும் அவர் உணரவில்லையே.

அரசியலமைப்பின் ஆறாவது திருத்தம் தமிழ்பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுப்பதுமல்லாமல் தமிழ்பேசும்மக்களின்கௌரவத்தையும்தன்மானத்தையும் இழக்கச் செய்கிறதென்பதைப்பற்றி காமினி ஜயசூரியா போன்றவர்கள் ஏன் சிந்திக்க மறுக்கிறார்கள்?

1956 ஆம் ஆண்டில் சிங்களம் மட்டும் மசோதா கொண்டு வரப்பட்டபோது பாராளுமன்றத்தில வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்குப் பிரதிநிதித்துவம் வகித்த அத்தனை தமிழ் முஸ்லிம் பிரதிநிதிகள் ஒரே குரலில் எதிர்த்து நின்றனர்; எதிர்த்து வாக்களித்தனர்.

இதை ஆளும்கட்சியான எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணியும் எதிர்க்கட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சியும் ஒரு தூசாகக்கூடப் பொருட்படுத்தவில்லை வடக்கு கிழக்கு மாகாண மக்களை அவர்கள் மதிக்கவே இல்லை.

இதன் விளைவுதான் நாட்டில் போராட்டங்களும் இனக்கலகங்களும் நடைபெற்று 1977 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் தமிழ் ஈழக் கோரிக்கைக்கு வடக்குக் கிழக்கு மாகாண மக்கள் வாக்களித்தனர்.

இதற்கும்கூட சிங்கள பௌத்த பேரினவாதம் மதிப்புக் கொடுக்க மறுத்தது. மீண்டும் பேச்சுவார்த்தை என்றும் விசாரணைக் குழுக்களென்றும் காலத்தைக் கடத்தியது. இதேசமயம் இனக்கலகங்களைத் தூண்டிவிட்டும் ஆயுதப்படைகளையும் காடையர்களையும் தமிழ் மக்களுக்கு எதிராக ஏவிவிட்டும் தமிழினத்தைக் கொலை செய்தும் கொள்ளையடித்தும் அடக்கி ஒடுக்கி நசுக்க முனைந்தது.

இவை போதாதென்று தமிழ் மக்களின் விடுதலைக் குரலைக் கழுத்தைப் பிடித்து நெருக்கி அடக்குவதுபோல இலங்கை அரசியல் அமைப்பில் ஆறாவது திருத்தத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றியது,

இதனால் பாராளுமன்றத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தங்கள் பிரதிநிதித்துவத்தை இழக்க

'றோ' என்ற உளவுப் பிரிவு மர்மங்கள் [2]

# ஏவுகணைகளை இந்தியாதான் கொடுத்தது என்று புலிகள் அறிவித்ததும் 'றோ' பதுங்கியது!

'றோ' உருவான பிறகு உள் நாட்டு உளவுப் பணிக்கு ஐ பி. பொறுப்பென்றும், வெளி நாட்டு உளவுக்கு 'றோ' பொறுப்பென்றும் பிரிக்கப்பட்டது. ஆனால், நடைமுறையில் உள் நாட்டு அரசியலில் உளவு வேலைகளைச் செய்ய இந்திரா 'றோ' வைப் பெரிதும் நம்பினார். இதற்குக்காரணம் 1971 இல் இந்திராவுக்கு மிகப்பெரிய அரசியல் செல்வாக்கு ஏற்பட 'றோ' செய்த உதவி தான்.

ஈட்டியது: வங்கதேசவிடுதலை உலக அரங்கில் இந்திராவை வலிமையான தலைவராக்கியது.

ஐ பி. யை 'சின்ன' வேலைகளுக்கு மட்டுமே இநதிரா பயன்படுத்தினார். தன் கட்சிக்காரர்களையே வேவு பார்ப்பதும். எதிர்க்கட்சிகள் பற்றி உளவுசொல்வதும்தான் சின்ன வேலைகள். நெருக்கடிநிலைப் பிரகடனம் செய்ய வேண்டாம் என்று ஐ பி இயக்குநர் கூறிய யோசனையை இந்திரா ஏற்க

### ஒட்டுக் கேட்பது எப்படி ..?

டெலிபோனை ஒட்டுக்கேட்பதிலும், தபால்களை பிரிப்பதிலும் நீண்ட கால அனுபவம் இந்திய உளவுப் பிரிவுக்கு உண்டு. (அவ்வப்போது தவறும் நடக்கும்! லால்கிஷன் அத்வானியின் பக்கத்து வீட்டுக்காரர் லாலா ஹன்ஸ்ராஜ் குப்தா இருவர் தபால்களையும் பிரித்துப் பார்த்து வந்த உளவுப் பிரிவினர் ஒருமுறை லாலா கவருக்குள் லால் கிஷன் கடிதத்தை மாற்றி வைத்து மாட்டிக் கொண்டார்கள்.)

ஒரு தொலைபேசியை ஒட்டுக்கேட்க இன்று உளவுத் துறைக்கு முப்பது நொடிகள் போதும். டெல்லியில் வசந்த விஹார், சாகாநகர், ஆனந்த்நிகேதன் போன்ற பகுதிகளில் தொலைபேசி ஒட்டுக் கேட்பு இயந்திரங்களுடன் கூடிய நவீன அலுவலகங்களை உளவுப் பிரிவினர் நடத்துகின்றனர். இந்த முகவரிகள் எந்தடைரக்டரியிலும் இருக்காது.

தொலைபேசியை ஒட்டுக்கேட்கப் பயன்படுத்தும் பல வழிகளில் இதோ ஒன்று . . . முதலில் உங்கள் தொலைபேசியைப் பழுதாக ஆக்கும்படி தொலைபேசி நிர்வாகத்திடம் உளவுஅமைப்புத் தெரிவித்துவிடும். நீங்கள் புகார் செய்ததும், உளவு அமைப்பின் ரெக்னீஷியன் தொலைபேசி ஊழியர் போல வருவார். உங்கள் தொலைபேசியின் உட்பகுதியில் ஒருசிறிய காதுத்தோடு போன்ற மைக்கைப் பொருத்தி விடுவார். அதில் ஒரு சென்ரி மீற்றர் நீளம் உள்ள ஏரியலும் உண்டு. நீங்கள் தொலைபேசியில் பேசுவது மட்டுமல்ல, அந்த அறையில் பேசுவது எல்லாவற்றையும் வெகு தொலைவிலுள்ள உளவு அலுவலகத்தில் உட்கார்ந்து கொண்டு கேட்கலாம்

அரசியல் கட்சிகள், இதர சமூக அமைப்புக்களின் ரகசிய செயற் குழுக் கூட்டங்களைக் கூடப் பதிவு செய்ய ஐ பி. யிடம் வசதி உண்டு. கூட்டம் நடக்கும் அறையில் சோபாவிலோ, ரீப்போவிலோ சிறுதட்டுப் போன்ற ஒரு மைக்கைப் பொருத்தி விட்டால் போதும். . . ஒரு கிலோ மீற்றர் தொலைவில் வண்டிக்குள்ளே உட்கார்ந்து கொண்டு அறையில் நடக்கும் அத்தனை பேச்சையும் பதிவு செய்துகொள்ள முடியும்.

வங்கதேசவிடுதலைப் போரின் போது 'றோ' ஏஜெண்டுகள் 'முக்தி வாகினி' என்ற பெயரில் கிழக்குப் பாகிஸ்தானில்

வில்லை. 'றோ' எமர்ஜென்ஸி அறிவிப்பதை ஆதரித்தது.

பின்னால் ஐ. பி. சொன்னதைத் தட்டாமல் கேட்ட

நாங்கள் கூறுவது அவருக்குப் பிடிக்கவில்லை என்று தெரிந்தது முதல் அவருக்குப் பிடித்ததை நாங்கள் கூற ஆரம்பித்துவிட்டோம்' என்று ஐ. பி. அதிகாரிகள் சமாதானம் கூறியிருக்கிறார்கள்!

இந்திரா 1977இல் தோல்வியடைந்து ஆட்சியை இழந்த பிறகு 'றோ' அமைபபின் சல்வாக்கும் சரிந்தது. ஜனதா அரசு 'றோ', ஐ பி முதலியவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டைக் குறைத்தது.

'றோ' தெரிவித்த பல யோசனைகளை அப்போதைய பிரதமர் மொரார்ஜி தேசாய் நிராகரித்துவிட்டார்.

கஹுட்டா என்ற இடத்தில் பாகிஸ்தான் ரகசியமாகக் கட்டிவந்த அணுமின் சார உலையின் வரைபடம் உட்பட முழுவிபரங்களையும் தருவதற்கு பாகிஸ்தானில் ஆள் இருப்பதாக 'றோ' தெரிவித்தது. அதற்காக ஒரு லட்சத்துப் பதின்மூன்றாயிரம் ரூபா சன்மானம் தரவேண்டும் என்று கூறப்பட்டது கஹுட்டா உலை பற்றிய முழு விவரம் கிடைத்தால், இஸ்ரேல் அங்கு போய் குண்டு வீசத் தயாராக இருந்தது. ஆனால், மொரார்ஜி தேசாய் மொத்தமாக இதை நிராகரித்தார்.

வங்கதேசத்தில் ஒரு அரசியல் கொலையை நடத்தவும் 'றோ' திட்டம் வகுத்தது. வங்கதேசம் உருவாகக் காரணமாயிருந்த முஜிபுர் ரகிமான் கொலை செய்யப்படுவார் என்பதை 'றோ' எதிர்பார்க்கவில்லை. அந்தக் கொலைக்குப் பழிவாங்க, புதிய அதிபர் ஜியா - வுர் - ரகுமானைக் கொலை செய்யலாமென்று 'றோ' கருதியது. இந்திரா பிரதமராக இருந்தபோது தயாரான இந்தத் திட்டம் நிறைவேறும் முன்பே ஆட்சி மாறி ஜனதா அரசு ஏற்பட்டு விட்டது. மொரார்ஜி இந்தக் கொலைகாரத் திட்டத்துக்கு அனுமதிதர மறுத்துவிட்டார்.

பிறகு ஜனதா அரசு கவிழ்ந்து, மீண்டும் இந்திரா பிரதமரான பிறகு வங்கதேசத்தில் ஜியா - வுர்-ரகுமான் கொலை செய்யப்பட்டார். இதில்

கக்கூடும் என்று கருதப்படுகிறது.

1980இல் இந்திரா பிரதமரான பிறகு பழையபடி 'றோ' வுக்கும், ஐ. பி. க்கும் நிதி ஒதுக்கீடு அதிகமாயிற்று. ஆர்.என்.காவ் திரும்ப அழைக்கப்பட்டு, பிரதமரின் பாதுகாப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டார். (இந்திரா கொலையான 24 மணி நேரத்தில் அவர் பதவியிலிருந்து விலகிவிட்டார்!)

தியிருக்கக்கூடிய குளறுபடிகளின் விளைவாகத்தான் இப்போது 'றோ'வை அதிலிருந்து விலகியிருக்கும்படி வி. பி. சிங் உத்தரவிடவேண்டியதாயிற்று.

இலங்கை நிலைமை பற்றி 'றோ' அதிகாரிகள் வகுத்த திட்டம், ஈழத் தமிழர்களுக்கு உதவுவதற்காகப் போடப்படவில்லை. பல்வேறு போராளிக் குழுக்களிடையே இருக்கும் தகராறுகளை, பலவீனங்

**'றோ' என்ற இந்திய உளவுஸ்தாபனம் பற்றி ராஜீவ் ஜே. ஆர் ஒப்பந்தத்துக்குப் பின்பும், இந்தியப்படை இலங்கைக்கு வந்த பின்னருமே இங்குள்ள மக்கள் கேள்விப்பட்டனர். இந்த 'றோ' வின் மர்மங்கள் பற்றி தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் யூனியர் விகடன் இவ்வருடம் ஜனவரி மாதம் எட்டாந்திகதி இதழில் வெளியிட்ட கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகிறது.**

உளவாளிகளின் வேலை, பதவி வரிசை பற்றிய நிர்வாக ஆய்வு ஒன்றை நடத்த சங்கரன் நாயர் அழைக்கப்பட்டார்.

ஆனால் 'றோ', ஐ பி. இரண்டும் தொடர்ந்து உருப்படியான வேலை எதுவும் செய்யவில்லை. மொரீஷியஸ் தீவில் இந்திய ஆதரவாளரான சர். சிவசாகர் ராமகூலத்தை மறுபடி பிரதமராக்க 'றோ' பல முயற்சிகள் செய்தும் கூட, அவர் தோல்வியடைந்தார்.

பஞ்சாபில் காலிஸ்தானிகள் பற்றியும் அதிக தகவல்களைத்திரட்ட முடியவில்லை. 1984 இல் இந்திரா பொற்கோவிலில் ராணுவத்தை அதிரடித் தாக்குதல் நடத்த அனுமதித்த போது றோ, ஐ. பி. கொடுத்த தகவல்கள் சரியில்லை என்று இராணுவ அதிகாரிகள் புகார் செய்தனர். ஒரு மணிநேர ஆபரேஷன்தான் என்று மதிபபிட்டது. பல நாட்களுக்கு நீடித்தது.

இலங்கையில் மிகப்பெரிய இனக் கலவரம் 1983 இல்

களைப் பயன்படுத்தி எல்லாக் குழுக்களையும் பலவீனப்படுத்தவே 'றோ' திட்டமிட்டது. இந்திய அரசு சொல்கிறபடி ஜெயவர்த்தனா கேட்கவேண்டும் என்ற அளவில் மட்டும், போராளிகளை அடியாட்களாகப் பயன்படுத்தும் உத்தியை 'றோ, வகுத்தது. ஆனால் அந்தத் திட்டமும் கடைசிவரை உருப்படியாக நிறைவேறவில்லை. புலிகள் மீதான தாக்குதலை மூன்று நாட்களில் முழுமையாக முடித்துவிடலாம் என்று இராணுவத்துக்கு 'றோ' தெரிவித்த தகவல் ஒரு குரூரமான ஜோக்காகிவிட்டது.

விடுதலைப் புலிகளிடம் ராக்கெட் ஏவுகணைகள் இருப்பதாகச் சென்ற ஆண்டு ராஜீவ் அரசு அறிவித்தது. வெளிநாட்டுஉதவி புலிகளுக்கு வருவதாகக் காட்ட இப்படிச் செய்யும்படி யோசனை தந்தார்கள். ஆனால், அந்த ராக்கெட் ஏவுகணைகளைக் கொடுத்ததே இந்தியா தான் என்று புலிகள் அறிக்கை வெளியிட்டதும். 'றோ' வின்

[illegible]

இதன் விளைவுதான் நாட்டில் போராட்டங்களும் இனக்கலகங்களும் நடைபெற்று 1977 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் தமிழ் ஈழக் கோரிக்கைக்கு வடக்குக் கிழக்கு மாகாண மக்கள் வாக்களித்தனர்.

இதற்கும்கூட சிங்கள பௌத்த பேரினவாதம் மதிப்புக் கொடுக்க மறுத்தது. மீண்டும் பேச்சுவார்த்தை என்றும் விசாரணைக் குழுக்களென்றும் காலத்தைக் கடத்தியது. இதேசமயம் இனக்கலகங்களைத் தூண்டிவிட்டும் ஆயுதப்படைகளையும் காடையர்களையும் தமிழ் மக்களுக்கு எதிராக ஏவிவிட்டும் தமிழினத்தைக் கொலை செய்தும் கொள்ளையடித்தும் அடக்கி ஒடுக்கி நசுக்க முனைந்தது.

இவை போதாதென்று தமிழ் மக்களின் விடுதலைக் குரலைக் கழுத்தைப் பிடித்து நெருக்கி அடக்குவதுபோல இலங்கை அரசியல் அமைப்பில் ஆறாவது திருத்தத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றியது,

இதனால் பாராளுமன்றத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தங்கள் பிரதிநிதித்துவத்தை இழக்க நேர்ந்தது.

இதைப்பற்றியும்கூட சிங்கள பௌத்த பேரினவாதம் கவலைப்படவில்லை. தமிழ் மக்களை அடிமைகளாக நடத்தலாம் என்றே அவர்கள் கனவு கண்டனர்.

தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினார்கள். இவர்களையும் ஆயுத பலத்தினால் ஒழித்துக்கட்டிவிடலாம் என்றும் ஆயுதம் ஏந்திய இளைஞர்களுக்குள்ளேயே சிண்டு முடிந்து பலவீனப்படுத்தித் தாங்கள் வெற்றி பெற்றுவிடலாம் என்றும் ஆட்சிபீடத்திலிருந்தவர்கள் கருதினார்கள்.

இதுவும் தோல்வியில் முடியப்போகிறதென்பதை அறிந்துகொண்டதும் இந்தியப்படையைக் கொண்டு வந்தனர். அதுவும் படுதோல்வியிலேயே முடிந்தது.

கடந்தகால அனுபவங்களிலிருந்து உண்மைநிலையைப் புரிந்துகொண்ட ஜனாதிபதி பிரேமதாசா நாட்டில் அமைதியும் சாந்தியும் நிலவுவதற்கு விடுதலைப்புலிகளின் உதவியையும் ஒத்துழைப்பையும் பெறுவதற்கு முயற்சி செய்து வருகிறார்.

இந்த நிலையில்தான் அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தை நீக்க வேண்டும்; வடக்கு கிழக்கு மாகாண சபையைக் கலைத்துவிட்டுத் தேர்தல் நடத்தவேண்டுமென்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கையை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்து வருகிறார்.

இதைக் குழப்புவதற்குப் பல தீயசக்திகள் நயவஞ்சகத்துடன் செயல்பட்டு வருகின்றன. இந்த சக்திகளின் வலையில் காமினி ஐயசூரியாவும் விழுந்துவிட்டாரோ என்று சந்தேகிக்கவேண்டியிருக்கிறது.

''நாட்டுப் பற்றுள்ள மக்கள்'' விவேகத்துடன் ஆறாவது திருத்தத்தை நீக்குவதற்கு ஆதரவளிக்க வேண்டும்; இல்லையேல் நாடு துண்டாடப்படுவது தவிர்க்கமுடியாமல் போய்விடும் என்பதை மட்டும் காமினி ஐயசூரியாவுக்குச் சொல்லிவைக்க விரும்புகிறோம்.

[illegible] போன்ற மைக்கைப் பொருத்தி விடுவார். அதில் ஒரு சென்ரி மீற்றர் நீளம் உள்ள ஏரியலும் உண்டு. நீங்கள் தொலைபேசியில் பேசுவது மட்டுமல்ல, அந்த அறையில் பேசுவது எல்லாவற்றையும் வெகு தொலைவிலுள்ள உளவு அலுவலகத்தில் உட்கார்ந்து கொண்டு கேட்கலாம்

அரசியல் கட்சிகள், இதர சமூக அமைப்புக்களின் ரகசிய செயற் குழுக் கூட்டங்களைக் கூடப் பதிவு செய்ய ஐ பி. யிடம் வசதி உண்டு. கூட்டம் நடக்கும் அறையில் சோபாவிலோ, ரீப்போவிலோ சிறுதட்டுப் போன்ற ஒரு மைக்கைப் பொருத்தி விட்டால் போதும். . . ஒரு கிலோ மீற்றர் தொலைவில் வண்டிக்குள்ளே உட்கார்ந்து கொண்டு அறையில் நடக்கும் அத்தனை பேச்சையும் பதிவு செய்துகொள்ள முடியும்.

வங்கதேசவிடுதலைப் போரின் போது 'றோ' ஏஜெண்டுகள் 'முக்தி வாகினி' என்ற பெயரில் கிழக்குப் பாகிஸ்தானில் நுழைந்து, பாலங்களைத் தகர்த்து பாகிஸ்தான் அரசைப் பயப்படவைத்தார்கள். அவர்கள் சென்று உளவுத் தகவல்கள் திரட்டி வந்த பிறகு தான் இராணுவம் நேரடிப் போருக்குச் சென்று வெற்றி வில்லை. 'றோ' எமர்ஜென்ஸி அறிவிப்பதை ஆதரித்தது.

பின்னால் ஐ. பி. சொன்னதைத் தட்டாமல் கேட்ட போது இந்திரா பாதிக்கப்பட்டார்! அவசர நிலையை ரத்து செய்துவிட்டு, தேர்தல் நடாத்தினால் அவர் ஜெயிப்பார் என்று ஐ. பி கூறியது. அதன்படி செய்து அவர் தோற்றார்! 'நாங்கள் என்ன செய்வது? மாயிருந்த முஜிபுர் ரகிமான் கொலை செய்யப்படுவார் என்பதை 'றோ' எதிர்பார்க்கவில்லை. அந்தக் கொலைக்குப் பழிவாங்க, புதிய அதிபர் ஜியா - வுர் - ரகுமானைக் கொலை செய்யலாமென்று 'றோ' கருதியது. இந்திரா பிரதமராக இருந்தபோது தயாரான இந்தத் திட்டம் நிறைவேறும் முன்பே ஆட்சி மாறி ஜனதா அரசு ஏற்பட்டுவிட்டது. மொரார்ஜி இந்தக் கொலைகாரத் திட்டத்துக்கு அனுமதிதர மறுத்துவிட்டார்.

பிறகு ஜனதா அரசு கவிழ்ந்து, மீண்டும் இந்திரா பிரதமரான பிறகு வங்கதேசத்தில் ஜியா - வுர்-ரகுமான் கொலை செய்யப்பட்டார். இதில் தனக்கு எந்தப் பங்கும் கிடையாது என்று இந்திரா மறுத்தார். அநேகமாக இந்திராவே திட்டத்தைக் கைவிட்டிருந்தாலும் 'றோ' அதிகாரிகள் தாமாகவே அதைச் செய்திருக் 'றோ' பல முயற்சிகள் செய்தும் கூட, அவர் தோல்வியடைந்தார்.

பஞ்சாபில் காலிஸ்தானிகள் பற்றியும் அதிக தகவல்களைத்திரட்ட முடியவில்லை. 1984 இல் இந்திரா பொற்கோவிலில் ராணுவத்தை அதிரடித் தாக்குதல் நடத்த அனுமதித்தபோது றோ, ஐ. பி. கொடுத்த தகவல்கள் சரியில்லை என்று இராணுவ அதிகாரிகள் புகார் செய்தனர். ஒரு மணிநேர ஆபரேஷன்தான் என்று மதிப்பிட்டது. பல நாட்களுக்கு நீடித்தது.

இலங்கையில் மிகப்பெரிய இனக் கலவரம் 1983 இல் வெடிக்கும் என்பதையோ, அகதிகள் பெருந்திரளாக வரக்கூடும் என்பதையோ உளவுப் பிரிவுகளால் முன் கூட்டிக்கணிக்கமுடியவில்லை. இலங்கையில் 'றோ' நடத் [illegible] புலிகள் மீதான தாக்குதலை மூன்று நாட்களில் முழுமையாக முடித்துவிடலாம் என்று இராணுவத்துக்கு 'றோ' தெரிவித்த தகவல் ஒரு குரூரமான ஜோக்காகிவிட்டது.

விடுதலைப் புலிகளிடம் ராக்கெட் ஏவுகணைகள் இருப்பதாகச் சென்ற ஆண்டு ராஜீவ் அரசு அறிவித்தது. வெளிநாட்டுஉதவி புலிகளுக்கு வருவதாகக் காட்ட இப்படிச் செய்யும்படி யோசனை தந்தார்கள். ஆனால், அந்த ராக்கெட் ஏவுகணைகளைக் கொடுத்ததே இந்தியா தான் என்று புலிகள் அறிக்கை வெளியிட்டதும். 'றோ' வின் நிலை பரிதாபமாகிவிட்டது!

ராக்கெட் ஏவுகணைகளை 'றோ' புலிகளுக்குக் கொடுத்தது ஒரு தனிக் கதை.

(தொடரும்)

# மீன்பிடி பயிற்சியாளர்களுக்கு ஆசிரிய நியமனம் வழங்கலாமே!

இன்று க.பொ.த சாதாரணதர வகுப்புக்களில் கற்பிக்கப்படுகின்ற தொழில் முன்னிலைப் பாடங்களில் ஒன்றாக கடலகமீன்பிடி (Marine Fisheries) உள்நாட்டு நன்னீர்மீன்பிடி (Inland Fisheris) என்பன விளங்குகின்றன. க பொ. த. சா. தரத்திற்கு இதனையும் ஒரு பாடமாக சேர்த்திருப்பது வரவேற்கக்கூடிய ஒன்றாக இருந்த போதிலும் இதுவரை காலமும் இப் பாடத்தினைப் போதிக்கவென இத்துறை சார்ந்த மீன்பிடி ஆசிரியர்கள் எனஒரு பிரிவினர் நியமிக்கப்படாமலிருப்பது பெருங்குறைபாடாகவே உள்ளது. இலங்கையின் தென்பகுதியில் எவ்வாறோ தெரியவில்லை ஆனால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இதற்கான ஆசிரியர்கள் எவரும்இல்லையென்பதுகுறிப்பிடத்தக்க அம்சமாகும்.

சித்திரம், சங்கீதம், நடனம், விவசாயம் போன்ற துறைகளுக்கென ஆசிரியர்கள் நியமிக்கப்படுகின்ற போது மீன்பிடிக்கும் ஒரு தனியான ஆசிரியர் நியமிக்கப்படாதது ஏன்? விவசாயப்பயிற்சி பாடசாலையிலும், குண்டசாலை விவசாய பாடசாலையிலும் பயிற்சிகளைமுடித்து வெளியேறுகின்றவர்களையும் ஏ எல் பரீட்சையில் விவசாயத்தை ஒரு பாடமாகப்படித்து சித்தியடைந்தவர்களையும் விவசாய ஆசிரியர்களாக நியமிக்கப்படுகின்றனர். இதே போன்று ஏ / எல் பரீட்சையில் சித்திரம் ஒரு பாடமாக எடுத்து சித்தியடைந்தவர்களுக்கும் சித்திர ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டுவருகின்றன. இதனைவிட சங்கீதத்தில் டிப்புளோமா பயிற்சி பெற்றவர்களுக்கும் சங்கீத/நடன ஆசிரியர்கள் நியமனங்கள் வழங்கப்பட்டுவருகின்றன அதேவேளை யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய இடங்களிலுள்ள மீன்பிடி பயிற்சிநிலையங்களில் 6மாதம் தொடக்கம் 1 வருட காலம் வரை மீன்பிடிக் கருவிகள், இயந்திரப் பயிற்சிகளைப் பெற்று வெளியேறுகின்ற பயிற்சியாளர்களுக்கு எவ்வித நிவா

## மக்கள் மடல்

ரணங்களும் வழங்கப்படுவதில்லை. இவ்வாறு பயிற்சியை முடித்து வெளியேறுகின்ற மாணவர்களுக்கு மீன்பிடி ஆசிரியர் நியமனங்களை வழங்கி அவர்கள் மூலமாக மீன்பிடிப் பாடத்தினை நல்லமுறையில் கற்பிக்க உதவினால் என்ன?

இந்து சமுத்திரத்தில் ஒரு தீவாகவும், கடற்றொழில் துறையில் நல்ல வாய்ப்பும், வளமும் கொண்டு விளங்குகின்ற இலங்கையின் கரையோரங்கள் நெடுகிலும் ஏராளமான மீன்பிடிக்குடியிருப்புகள் காணப்படுகின்றன. ஏராளமான மீனவர்களைக் கொண்டு வாழுகின்ற பிரதானகுடியிருப்புக்கள் தோறும் க. பொ. த. சாதாரண தரம், உயர் தரம் வரையிலான வகுப்புக்களைக் கொண்ட பாடசாலைகள் நிறைய இருக்கின்றன. இப்பாடசாலைகளில் மீன்பிடியையொரு பாடமாகப் புகுத்தினால் இலகுவாக சித்தியடைவதுடன் மாணவர்களுக்கு எதிர்காலத்தில் தமது தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வாய்ப்பாகவும் அமையும். குறிப்பாக வலை பின்னுதல், கயிறு பொருத்துதல், படகு ஓட்டுதல் இயந்திரம் பழுது பார்த்தல், கடல் சட்டங்கள் படித்தல், நீந்துதல் போன்ற அடிப்படைப் பயிற்சிகளை பெற்றுக் கொள்ள முடியும். பாடசாலையை விட்டு வெளியேறுகின்ற மாணவர்கள் இத்துறையில் சுயமாகஈடுபட்டுதொழில் வாய்ப்பையும் பெற்றுக் கொள்ள முடியும்.

அடுத்த வருடம்முதல் 9ஆம் ஆண்டுமுதல் தொழிற்பயிற்சி புகுத்தப்படுமென இன்றைய கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலி தெரிவித்திருப்பது வரவேற்கத் தக்கது. அவ்வாறான தொழிற்பயிற்சி தொடர்பான கல்வியைப்புகுத்தும் போது மீன்பிடித்தலுக்குஉரிய இடம் கொடுப்பது மீனவர் குடியிருப்புகளில் இருக்கின்ற மாணவர்களின் எதிர்காலம் சுபீட்சமடைய வழி பிறக்கும்.

எனவே ஏனைய துறைகளுக்கு அரசினர் நியமனம் வழங்கப்படும்போது மீன்பிடி ஆசிரியர்களையும் நியமனஞ்செய்து இத்துறைக்குப் புத்துயிர் அளிக்கும்படி வேண்டுகின்றோம்.

வங்காலை ஏ. ஆனந்தன்

# உள்ளூராட்சி தேர்தலில் 5 எதிர்க்கட்சிகள் கூட்டு

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலின் போது எதிர்க் கட்சிகள் ஐந்து கூட்டாகப் போட்டியிட எண்ணியுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி, தேச விடுதலைக்கட்சி என்பனவே இவ்வாறு கூட்டாக போட்டியிடவுள்ளன.

எதிர்க் கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா நாடு திரும்பியதும் இந்த முடிவு தெரிவிக்கப்படும்.

இதேசமயம் ஏனைய எதிர்க் கட்சிகளையும் இதில் இணைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன.

# யாழ். முஸ்லிம் வட்டாரத்தில் சிற்றூர் அவை அங்குராப்பணம்

(யாழ்நகர்)

யாழ். முஸ்லிம் வட்டாரத்தில் விடுதலைப்புலிகள்மக்கள் முன்னணியின் சிற்றூர் அவைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

முஸ்லிம் வட்டாரம் வடக்கு சிற்றூர் அவைக்கு பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் ஏ.பாரூக், உபதலைவர் எஸ்.கே. நகீப் செயலாளர் எஸ்.ஏ.எஸ். ஹமீட், உபசெயலாளர் எஸ்.எம். அபூபக்கர், பொருளாளர் ஏ எஸ்.எச் லாபிர்.

முஸ்லிம் வட்டாரம் புதிய சோனகத்தெரு சிற்றூர் அவைக்கு தெரிவாகியுள்ளோர் விபரம் வருமாறு:- தலைவர் ஏ. ஆர். அசிஸ், உபதலைவர் எம் அப்துல் காதர், செயலாளர் ஆர். சுகூர், உபசெயலாளர் பி. ராமசாமி, பொருளாளர் எஸ்.எச். அசன்கனி.

முஸ்லிம் வட்டாரத்தில் இணக்கசபை அமைக்கப்பட்டுள்ளதாகவும், அடுத்த வாரம் செயல்படும் எனவும், முஸ்லிம் வட்டார விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் கூறியுள்ளார். (52)

# [illegible]லைவிழாவும் விளையாட்டுப் [illegible]டியும்

([illegible]வவுனியா)

கட[illegible] சனிக்கிழமையும், ஞாயிற்றுக் கிழமையும் காக்கையன்குளம் அரபாத் விளையாட்டுக் கழகத்தின் விளையாட்டுப் போட்டியும் கலை நிகழ்ச்சியும் நடைபெற்றன

காக்கையன்குளம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற மேற்படி நிகழ்ச்சிகளில்கரப்பந்தாட்டப்போட்டியும், 65 மைல் மரதன் சைக்கிள்ஓட்டப்போட்டியும்விசேட நிகழ்ச்சியாக அமைந்தன.

இந்தியப் படை விலகிச் சென்றதையடுத்து, வன்னிப் பிரதேசத்தில் அடுத்தடுத்து விளையாட்டு நிகழ்ச்சிகளும், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. (தி)

## இந்து சமய

# அமைச்சு செயலாளர் மட்டக்களப்பு விஜயம்

(மட்டக்களப்பு)

இந்து சமய அலுவல்கள், தமிழ் அலுவல்கள் இராஜாங்க அமைச்சு செயலாளர் திரு. கே. சி. லோகேஸ்வரன் அண்மையில்மட்டக்களப்புக்கு வருகைதந்தார்.

விபுலானந்தர் இசை நடனக் கல்லூரியை கிழக்கு பல்கலைக்கழகத்துடன் இணைத்தல், பல்கலைக்கழகத்துடன் இணைக்கும் வரையிலான இடைகாலநடவடிக்கை மற்றும்இக் கல்லூரியின்அபிவிருத்தி போன்ற விடயங்கள் குறித்து ஆராய்வதற்காகவே தமிழ் அலுவல்கள் பணிப்பாளர் ஜனாப் எஸ். எம். நஹியா சகிதம் வருகைதந்தார்.

கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் எஸ். சந்தானம், அரச அதிபர் திரு. ஆர். யோகநாதன், இந்து இளைஞர் மன்ற தலைவர் திரு. எம். சிவநேசராசா, இராமகிருஷ்ன மிஷன் சுவாமி ஜீவானந்தஜீ உட்பட பெற்றோர், மாணவிகளுடனும் இதுபற்றி கலந்துரையாடினார். (37)

Registered us a News Paper at the G. P. O.

# ஈழநாதம்

## அரிசி ஆலைகளுக்கான அனுமதி சூழல் பாதுகாப்புச் சபையிடம்

(மட்டக்களப்பு)

அரிசி ஆலைகள், மர ஆலைகள் அமைப்பதற்கான அனுமதி வழங்கும் பொறுப்பு இம்மாதம் முதல் சூழல் பாதுகாப்பு சபையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவித்தல் சகல பிரதேச சபைகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வட-கிழக்கு மாகாண சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பாக ஆராயப்படும் உயர் மட்ட மாநாடு இம்மாதம் 16 ஆம் திகதி "செத்சிறிபாயா"வில் நடைபெறும்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர்கள், பிரதேச சபை பொறுப்பு உத்தியோகத்தர்கள் கலந்து கொள்வர். (37)

## சாதனங்கள் ஆக்கல் பயிற்சி

சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாசாலையில் முறைசாராக் கல்வித்திட்டத்தின் கீழ் கட்புல சாதனங்கள் ஆக்கல் என்னும் பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளன.

இதற்கான நேர்முகப் பரீட்சை நாளை காலை 9 மணிக்கு நடைபெறும். விண்ணப்பம் செய்யாதோரும் விரும்பின் தமது விண்ணப்பங்களுடனும் சான்றிதழ்களுடனும் நிலையத்திற்கு நேரடியாகவரலாம்.

# தொழிற்சங்க உறுப்பினர் எண்ணிக்கைக்கும் அரசியலுக்கும் தொடர்பில்லை

## மலையக முன்னணி தலைவர் விளக்கம்

(கொழும்பு)

கூடுதலான உறுப்பினரைக் கொண்ட தொழிற்சங்கம் தான் மலையக மக்களுக்கு விமோசனம் தேடித்தரும் என்ற கருத்து மலையகத்தில் இன்று மாறிவருகிறது. தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கும் அரசியல் போராட்டங்களுக்குமிடையிலுள்ள பேதத்தையும் மக்கள் புரிந்து கொள்ளஆரம்பித்திருக்கிறார்கள். நான் கைதானபோது தொழிற்சங்க பிரிவினைகளை மறந்து மக்கள் நடாத்திய போராட்டம் அந்த தெளிவினால் ஏற்பட்ட பிரதிபலிப்பாகும்.

மலையக மக்கள் முன்னணியின் கொழும்புப் பிரிவு அமைப்பாளர் கூட்டத்தில் தலைவர் பி. சந்திரசேகரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். முன்னணியின் நிர்வாக செயலாளர் திரு ஆர். என். செல்லையா வரவேற்புரையாற்றினார் திரு சந்திரசேகரன் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:-

அண்மைக்கால நிகழ்வுகள் காரணமாக மலையக மக்களும் இளைஞர்களும் தீவிரமாக சிந்தித்து தமது சமூக விடுதலைக்கு அரசியல் கட்சி தேவையென்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அவர்களின் எண்ணங்கலளையும் செயல்களையும் ஊக்குவிப்பதற்கும் மலையக மக்கள் வாழ்வில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் உறுதியான கொள்கைகளின் அடித்தளத்தில் உருவாக்கப்பட்டது மலையக மக்கள் முன்னணி.

கொழும்பில் குடியேறி வசித்தாலும் தனது பிறப்பிடம் மலையகம் என்பதை ஒவ்வொருவரும் மனதில் கொள்வதோடு எம் மக்களின் உயர்வுக்காக முன்னணி மேற்கொள்ளும் சகல நடவடிக்கைகளுக்கும் ஆதரவு கிடைக்குமென்ற நம்பிக்கை ஏற்படுகிறது.

முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. பி. ஏ. காதர் உரையாற்றும்போது கூறியதாவது:-

விபரமறியாத குழந்தைகளின்பெயரையும் உள்ளடக்கி அன்று பெற்றோர் அனுப்பிய இந்திய குடியுரிமை மனுவை இன்று பராயமடைந்து, இந்த நாட்டின் ஓர் அங்கமாகவே வாழ்ந்துவரும் அவர்களுக்கெதிராகப் பாவித்து அவர்களை இந்தியா செல்ல நிர்ப்பந்திப்பது நியாயமற்ற செயலாகும்.

நாம் நான்கு ஆலோசனைகளை அரசிடம் சமர்ப்பித்துள்ளோம். அவை ஒப்புக்கொள்ளப்பட்டால் புரையோடிப்போயிருக்கும் இப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வு ஏற்படும்.

இக் கூட்டத்தில் கொழும்பின் 15 வட்டாரங்களிலும் செயற்பட 11 அமைப்பாளர் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டது. துணைத் தலைவர் திரு. வி. டி. தர்மலிங்கம் உட்படப் பலர் உரையாற்றினர் கவி முத்துசாமி எழுச்சிக்கீதம் பாடினார்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் வல்லிபுரம் பாலசிங்கம்

தோற்றம் 26 - 06 - 1954

அநியாய அழிப்பு 05 - 06 - 1989

அண்ணனும் தம்பியும் கூட்டாகச் சென்றீர்
மைத்தினரொடு பெறாமகனும் கூடவே வந்தனர்
குலதெய்வம் வீதியிலே சுட்டெரித்த துயரமொடு
ஏக்கம் கலையாது சோபிழன்றே வாடுகின்றோம்
உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்

மனைவியும், பிள்ளைகளும்


### அமரர் தம்பிமுத்து யோகேந்திரம்

தோற்றம் 28 - 07 - 1958

அநியாய அழிப்பு 05 - 06 - 1989

ஏக்கமொடு நெடுமூச்சு என்னாளும் இருக்கும்
ஏங்கியே தவிக்கிறோம் அப்பாவை நினைத்து
மாமாமார் இருவரொடு அத்தானும் என்றால்
ஆறுமோ துயரம தீருமோ ஏக்கம.
உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, பிள்ளைகள்.




### பிரான்சிற்கு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களை ஒரிஸாவுக்கு அனுப்பிவைக்க மேற்கு வங்காளஅரசுநடவடிக்கைஎடுத்து வருகிறது.

கல்கத்தா விமான நிலைய ஊழியர்களின் உதவியுடன் இவர்களுக்கு உணவு வழங்கப்படுகிறது.

### மாணவர்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மதிய உணவு முத்திரை பெறுகிறார்கள். மாதம் 5 இலட்சத்து 73ஆயிரத்து 820 ரூபா செலவு ஆகும்.

இம்மாதம 15ஆம் திகதி முதல் விநியோகம் செய்யப்படும். அடுத்த மாதம் 15ஆம் திக_வரை பயன்படுத்த முடியும் என்றார். (37)

### பரந்தன்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாதம் அமைச்சரவைக்கு தெரிவித்திருந்தார்.

இன்னும் இரு வாரங்களில் குளோரின் உற்பத்தி ஆரம்பமாகும். இவ்வுற்பத்தி உள்ளூர்த் தேவையைப் பூர்த்தி செய்யப்போதுமானது நாளாந்தம் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் 5 மெட்ரிக்தொன் குளோரினை உற்பத்தி செய்யமுடியும்.

இன்னும் 2 மாதங்களில் கோஸ்ரிக்சோடா மற்றும் இர

### மட்டக்களப்பில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு-கிழக்கு பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஆனந்தராசா, மட்டக்களப்புப் பிரதேச இராணுவ, பொலிஸ், இராணுவத் தளபதிகள் கலந்து கொண்டார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சட்டம், ஒழுங்கு, பாதுகாப்பு குறித்து இப் பேச்சுவார்த்தையின்போது ஆராயப்பட்டது.

அத்துடன் இதுவரை மூடப்படாத களுவாஞ்சிக்குடி, கிரான், கல்லடி இராணுவ முகாம்களை மூடுவது குறித்து விடுதலைப்புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

### 3 மாதத்தில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பர்களுக்கு நேற்று மாலை விளக்கிக் கூறினார்.

#### மோதுவதற்கு தயாரில்லை

விடுதலைப் புலிகளுடன் மோதுவதற்குத் தயாராக இல்லையென்றும் அவர்களுடன் மோதுவது என்ற பேச்சுக்கே இடமில்லையென்றும் ஜனாதிபதி பிரேமதாசா விடுதலைப் புலிகளின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் இராணுவம் குவிக்கப்படுவதாகவும் போர் முஸ்தீபுகளை அரசு மேற்கொள்ளப்படுவதாகவும் விடுதலைப் புலி

### இயற்கை விஞ்ஞான கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இயற்கை விஞ்ஞான நூதனசாலை என்னும் பொருள் பற்றிய கருத்தரங்கு இன்று பிற்பகல் 2மணியளவில் யாழ். பல்கலைக்கழக பௌதிகத் துறை விரிவுரை மண்டபத்தில் இடம்பெறும்.

லண்டன் இயற்கை விஞ்ஞான நூதனசாலையைச் சேர்ந்த கலாநிதி கிறிஸ்தோப்பர் எச். சி. லயால் கருத்துரை வழங்குவார்.

தென்றும் வாரா வாரம் மா

ஏக்கம் கலையாது சோகமுடனே வாடுகின்றோம்
உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்

மனைவியும், பிள்ளைகளும்

## அமரர் தம்பிமுத்து யோகேந்திரம்

தோற்றம் 28 - 07 - 1958 — அநியாய அழிப்பு 05 - 06 - 1989

ஏக்கமொடு நெடுமூச்சு என்னாளும் இருக்கும்
ஏங்கியே தவிக்கின்றோம் அப்பாவை நினைத்து
மாமாமார் இருவரொடு அத்தானும் என்றால்
ஆறுமோ துயரம தீருமோ ஏக்கம.

உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

மனைவி, பிள்ளைகள்.

## அமரர்
## தளையசிங்கம் ஜெயானந்தராஜா

தோற்றம் 10 - 05 - 1968 — அநியாய அழிப்பு 05 - 06 - 1989

மணமேடை காண ஏங்களாய் இருந்தோம்
மதிப்போடு வாழ உழைப்பிற்கே சென்றீர்
எம்மண்ணில் அந்நியர் உனையழித்து போனான்
உலகம் அழியினும் உனையென்றும் மறவோம்.

உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

பெற்றோரும், சகோதரர்களும்

## அமரர்
## வல்லிபுரம் துரைராஜசிங்கம்



தோற்றம் 10 - 05 - 1945 — அநியாய அழிப்பு 05 - 06 - 1989

பாலர் பஞ்சம் பத்து வயதென்றீர்
படுத்துறங்கத் தெரியாது ஓடி உழைத்தீர்
அந்நிய துப்பாக்கி உன்னுயிரைப் பறித்தாலும்
அப்பாவின் நினைவோடு என்னாளும் வாழ்ந்திடுவோம்
பூவொடு பொட்டிழந்து தவிக்கின்ற அம்மாவும்
புன்னகையைத் தானிழந்து வாடியழும் பிள்ளைகளும்
நல்லவரை வல்லவரைப் பிரிந்தழும் ஊரவரோடு
என்னாளும் எம்நெஞ்சில் நீங்காமல் நீயிருப்பாய்

உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்

(B/1098) மனைவி, பிள்ளைகள்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31 - ஆம் லக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990 ஆம் இண்டு ஜூன் மாதம் 5 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
ஆ

அனுப்பிவைக்க மேற்கு வங்காளஅரசுநடவடிக்கைஎடுத்து வருகிறது.

கல்கத்தா விமான நிலைய ஊழியர்களின் உதவியுடன் இவர்களுக்கு உணவு வழங்கப் படுகிறது.

### மாணவர்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மதிய உணவு முத்திரை பெறுகிறார்கள். மாதம் 5 இலட்சத்து 73ஆயிரத்து 820 ரூபா செலவு ஆகும்.

இம்மாதம 15ஆம் திகதி முதல் விநியோகம் செய்யப்படும். அடுத்த மாதம் 15ஆம் திகதி வரை பயன்படுத்த முடியும் என்றார். (37)

### இந்தியா

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் பெரிய வெங்காயம், பருப்பு, மருந்துவகைகளையும் இலங்கை பாகிஸ்தான, துருக்கி போன்ற நாடுகளில் இருந்து பெற்றுக் கொண்டது.

இந்தப் பேச்சுவார்த்தைகளையடுத்து இலங்கையிலிருந்து கறுவா, ஏலம, மிளகு போன்றவற்றைஇந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யவும், இந்தியாவில் இருந்து பருப்பு, வெங்காயம் மற்றும் பொருட்களை இறக்குமதி செய்யவும் ஏற்பாடாகி வருகிறது.

தற்போது பெருமளவு இந்தியப் பொருட்கள் கள்ளக் கடத்தல் மூலம் நாட்டிற்குள் வருவதால் அவற்றிற்கு தெற்கில் பலத்த கிராக்கி ஏற்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது

### மாணவர் குறைப்பு

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த வருடம் ஒதுக்கீடு செய்த நிதியில் 60 இலட்சம் ரூபா வெட்டு விழுந்துள்ளது கடந்த வருட செலவீனத்தை விட செலவீனம் பன்மடங்கு அதிகம் என அரசு அறிந்துள்ள போதிலும் இந்நிதி ஒதுக்கீடு வெட்டுக்குரிய பின்னணி என்ன?

கூடிய நிதி ஒதுக்கீடு செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால் நிதி குறைக்கப்பட்டுள்ளது. இச்செயல் அரசுக்கு இப் பல்கலைக்கழக அபிவிருத்தியில் ஆர்வம் இல்லை என்பதை எடுத்துக் காட்டுகிறது.

எமது பல்கலைக் கழகத்தில் குறைவான மாணவர் அனுமதி, நிதிவெட்டு வசதியற்ற கட்டிடங்கள் போன்றன குறித்து நாம் உயர்கல்வி அமைச்சு ஒருமித்த குரலில்' எமது கண்டனங்களை தெரிவிக்க வேண்டும் என்றார்.

செயலாளர் திரு. எஸ் எஸ். சூரியகாந்தன் நன்றியுரையாற்றினார், (37)

யாற்றினர் கவி முத்துசாமி எழுச்சிக்கீதம் பாடினார்.

### பரந்தன்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாதம் அமைச்சரவைக்கு தெரிவித்திருந்தார்.

இன்னும் இரு வாரங்களில் குளோரின் உற்பத்தி ஆரம்பமாகும். இவ் வுற்பத்தி உள்ளூர்த் தேவையைப் பூர்த்தி செய்யப்போதுமானது நாளாந்தம் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையில் 5 மெட்ரிக்தொன் குளோரினை உற்பத்தி செய்யமுடியும்.

இன்னும் 2 மாதங்களில் கோஸ்ரிக்சோடா மற்றும் இரசாயனப் பொருட்களின் உற்பத்தி ஆரம்பிக்கப்படவுள்ளது என கூட்டுத்தாபனத் தலைவர் திரு. உபாலி சில்வா தெரிவித்தார்.

### அநுரா வருகிறார்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சீலனை செய்து வருவதாகத் தெரிகிறது. புலிகளால் ஏற்றுக்கொள்ள முடியாத நிபந்தனைகளைப் போடுவதை விடுத்து, அவர்களுடன் பேசி, அவர்களது நிலைப்பாட்டை நன்கு புரிந்து ஒரு முடிவை எடுக்க, சுதந்திரக்கட்சித் தலைவர்கள் விரும்புவதாகத் தெரிகிறது.

### தட்டுப்பாட்டை

(1ஆம் பக்கத் தொர்டர்ச்சி)

கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனம் மேலும் 4209 மெற்றிக் தொன் பருப்பை இறக்குமதி செய்வதற்கான கொள்வனவுக் கட்டளையை அனுமதித்து வைத்திருக்கிறது

அத்துடன் அடுத்த வாரம் 1200 மெற்றிக் தொன் வெங்காயம் கொழும்புத் துறைமுகத்தை வந்துசேர இருப்பதாகவும் ஆரிய சமரவீர தெரிவித்தார்.

### அரசாங்கக்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

குகந்ததாக இருப்பது கருத்திற் கொள்ளப்படும். இக் காணிகளில் வீடுகளை அமைப்பதற்கும், கைத்தொழில், விவசாய முயற்சிகளை மேற்கொள்வதற்கும் நிதியுதவி வழங்கப்படுமெனவும் யாழ். அரச அதிபர் அன்ரன் அல்பிரட் தெரிவித்தார்.

இந்தப் பிரிவுகள் தவிர்ந்த மற்றைய அரச அதிபர் பிரிவுகளில் காணியற்று இருப்பவர்களுக்கு பிற மாவட்டங்களில் காணி பெற்றுக் கொடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஒவ்வொரு மாவட்ட அரச அதிபர்களுடனும் தான் தனித் தனி தொடர்பு கொண்டு அந்த மாவட்டத்தில் உள்ள அரச காணிகளில் இவர்களுக்குக் காணி பெற்றுக்கொடுக்க இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (மு)

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு - கிழக்கு பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஆனந்தராசா, மட்டக்களப்புப் பிரதேச இராணுவ, பொலிஸ், இராணுவத் தளபதிகள் கலந்து கொண்டார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சட்டம், ஒழுங்கு, பாதுகாப்பு குறித்து இப் பேச்சு வார்த்தையின்போது ஆராயப்பட்டது.

அத்துடன் இதுவரை மூடப்படாத களுவாஞ்சிக்குடி, கிரான், கல்லடி இராணுவ முகாம்களை மூடுவது குறித்து விடுதலைப்புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களையடுத்து அமைச்சர் ஹமீத் கல்லடி இராணுவ முகாமில் இராணுவ பொலிஸ் உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினார்.

விடுதலைப்புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் குறித்து அமைச்சர் படை அதிகாரிக்கு விளக்கிக் கூறியதாக தெரியவருகிறது.

அடுத்தவாரம் திருக்கோணமலையில் சந்திப்பு இடம் பெறும். (37

### ப.நோ. கூ சங்க...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

என உத்தரவு பெற்ற வர்த்தகர்களால் விடுத்த அறிக்கைக்கு பொது முகாமையாளர் சிவப்பிரகாசம் பதில் அளித்துள்ளார்.

களஞ்சியங்களிலும் கிளைகளிலும் உள்ள தராசுகள் யாவும் முத்திரையிடுவதற்கு தேதி ஒதுக்கித் தரும்படி நாம் 1990ஆம் ஆண்டு மாசி மாதம் நிறையளவை, முகத்தலளவை பரிசோதகருக்கு அனுப்பியிருந்த கடிதப்படி 12-3-90 முதல் 15-3-90 வரை எமது 41 கிளைகளிலும் உள்ள தராசுகள் முத்திரையிடப்பட்டது,

களஞ்சியங்களில் உள்ள தராசுகள் 28-5-90இல் சரிபார்த்து 30-5-90இல் முத்திரையிடுவதற்கு நிறையளவை, முகத்தலளவை பரிசோதகர் திகதி ஒதுக்கித் தந்து அதன்படி முத்திரையிடப்பட்டது.

மேலும், எமது ப. நோ. கூ. சங்கத்தில் உள்ள தராசுகள் முத்திரையிடப்பட முன்நிறை குறைவாகக் காட்டப்பட்டதற்கு எந்தவித முறைப்பாடும் எமக்குக் கிடைக்கவுமில்லை, ஆதாரப்படுத்தவுமில்லை.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பர்களுக்கு நேற்று மாலை விளக்கிக் கூறினார்.

### மோதுவதற்கு தயாரில்லை

விடுதலைப் புலிகளுடன் மோதுவதற்குத் தயாராக இல்லையென்றும் அவர்களுடன் மோதுவது என்ற பேச்சுக்கே இடமில்லையென்றும் ஜனாதிபதி பிரேமதாசா விடுதலைப் புலிகளின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் இராணுவம் குவிக்கப்படுவதாகவும் போர் முஸ்தீபுகளை அரசு மேற்கொள்ளப்படுவதாகவும் விடுதலைப் புலிகள் சுட்டிக் காட்டியபோதே ஜனாதிபதி பிரேமதாசா புலிகளுடன் மோதுவதற்குத் தயாராக இல்லையென்று மேற்கண்டவாறு பதிலளித்தார்.

இன்று நாம் சமாதான சூழ்நிலையைத் தொடர்ந்து பாதுகாப்பதற்கு அரசும் விடுதலைப் புலிகளும் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவ

### அரசியல் தீர்வுக்கு...

(1 ஆம் பக்கத் தெடேர்ச்சி)

அறிக்கைகள் விடுவது கவலை அளிப்பதாகவும்தெரிவித்தார்.

மேலும் தேர்தல் சுதந்திரமாகவும், அமைதியாகவும் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் என்றும், ஆயுதப் பயமுறுத்தல் இருக்காது எனவும், தேர்தலைப்பார்வையிட சர்வதேச கண்காணிப்புக் குழுவை அனுப்பலாம் எனவும் பேட்டியின்போது தெரிவித்தார்.

புலிகள் போருக்கு ஆயத்தம் செய்யவில்லை எனவும், இந்தியாவில் உள்ள தமிழ் தேசிய இராணுவத்தினரின் ஊடுருவலைத் தடுப்பதற்காகவும், தம்மீது எதிர்பாராத தாக்குதல் மேற்கொள்ளப்பட்டால் அதிலிருந்து பாதுகாப்பதற்காகவுமே காவல் அரண்களை அமைப்பதாகவும் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கில் புலிகள் வரி அறவிடுவது பற்றிய கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையில் நாங்கள் கடந்த 17 வருடங்களாக கெரில்லாப் போராட்டம் நடத்தி வருவதாகவும், மக்கள் ஆதரவு தமக்குப் பெருமளவில் உண்டென்றும், ஆடம்பரப்பொருட்கள் மீதானவரி முன்னரே எம்மால் விதிக்கப்பட்டது என்றும், அதேவேளை மக்கள் எம்மைத் தமது பாதுகாப்புக் கவசம் எனக் கருதுவதால் முன்வந்தே நிதி உதவி செய்வதாகவும் இவ்வரி விதிப்புத் தொடர்பான பிரச்சினைகளை வேண்டுமென்றே கொழும்புப் பத்திரிகைகளே மிகப்படுத்துவதாகவும் யோகி தெரிவித்தார்.

### கருத்தரங்கு
(யாழ்ப்பாணம்)

இயற்கை விஞ்ஞான நூதனசாலை என்னும் பொருள் பற்றிய கருத்தரங்கு இன்று பிற்பகல் 2மணியளவில் யாழ். பல்கலைக்கழக பௌதிகத் துறை விரிவுரை மண்டபத்தில் இடம்பெறும்.

லண்டன் இயற்கை விஞ்ஞான நூதனசாலையைச் சேர்ந்த கலாநிதி கிறிஸ்தோப்பர் எச். சி. லயால் கருத்துரை வழங்குவார்.

தென்றும் வாரா வாரம் மாவட்ட ரீதியாக இரு தரப்பினரும் சந்தித்து அந்தந்த மாவட்டத்தில் எழும் பிரச்சனைகளுக்குப் பேச்சு வார்த்தைமூலம் தீர்வு காண்பதென்று ஜனாதிபதி பிரேமதாசாவும் விடுதலைப் புலிகளும் ஒப்புக்கொண்டதாகவும் திரு. அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம
**பொதுக் கூட்டம்**

காலம் : 7. 6. 90 காலை 9. 30 மணி

இடம் : யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபம்

யாழ். மாவட்டத்தில் உள்ள இது வரை பதிவு செய்த தனியார் கல்வி நிறுவன இயக்குனர்களும் பிரத்தியேக வகுப்புகளுக்குரிய ஆசிரியர்களும் தவறாது சமுகமளிக்கும் படி வேண்டப்படுகின்றனர்.

(B/1099)